# CHINMAYA ACADEMY FOR CIVIL SERVICES

# TNPSC GROUP 2/2A EXAMINATION 2025

## PRELIMS - ANSWER KEY

## Part-A – General Tamil

வினாக்கள் : 1–100 மொத்த மதிப்பெண்கள் : 150

Questions : 1–100 Total Marks: 150

1. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

(A) செற்றார்

(B) உற்றார்

(C) நண்ணார்

(D) ஒன்னார்

(E) விடை தெரியவில்லை

2. அகரவரிசைப்படி சொற்களை அமைக்க :

(A) கருவூலம், களத்துமேடு, கவரிமான், கலம்பூச்சு

(B) கவரிமான், கருவூலம், களத்துமேடு, கலம்பூச்சு

(C) கருவூலம், கலம்பூச்சு, கவரிமான், களத்துமேடு

(D) கலம்பூச்சு, கவரிமான், கருவூலம், களத்துமேடு

(E) விடை தெரியவில்லை

3. கூற்று : ஏது ?, யாது ?, என்னும் சொற்கள் சுட்டுச் சொற்களாகும்.

காரணம் : ஏ, யா, என்ற சுட்டெழுத்தை அடிப்படையாகக் கொண்டு சொற்கள் அமைந்துள்ளன.

(A) கூற்று சரி; காரணம் தவறு

(B) கூற்று சரி; காரணம் சரி

(C) கூற்று தவறு; காரணம் சரி

(D) கூற்று தவறு; காரணம் தவறு

(E) விடை தெரியவில்லை

4. பொருத்துக :

| சொற்கள் | | இலக்கணம் |
|---|---|---|
| (a) அது, நாய் | 1. | அஃறிணை பன்மை |
| (b) அவர், அவர்கள் | 2. | உயர்திணைப் பெண்பால் ஒருமை |
| (c) அவை, நாய்கள் | 3. | அஃறிணை ஒருமை |
| (d) தங்கை | 4. | உயர்திணைப் பன்மை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

5. உ.வே. சாமிநாதரின் வாழ்க்கை வரலாற்று நூலின் பெயர் ________.

(A) மனவாசம்

(B) சுய சரிதம்

(C) என் சரிதம்

(D) என் கதை

(E) விடை தெரியவில்லை

6. பெருஞ்சித்திரனாரால் நடத்தப்படாத இதழைத் தெரிவு செய்க

(A) தென்மொழி

(B) தமிழ்ச்சிட்டு

(C) தேசபக்தன்

(D) தமிழ் நிலம்

(E) விடை தெரியவில்லை

7. "கனலி" என்ற சொல்லைக் குறிக்காத சொல்லைத் தேர்க.

(A) சூரியன்

(B) நெருப்பு

(C) பன்றி

(D) கரும்பு

(E) விடை தெரியவில்லை

கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடு :

நேற்றைப் போல் இன்று இல்லை, இன்று போல் நாளை இல்லை என்கிற நியதியை அறிந்து நாளும் கற்கிற கட்டாயம் வருகிறபொழுது நாம் மீளவும் இளையோராகி பயிலத் தொடங்குகிறோம். புறத் தேவைகளுக்கான அறிவுசார் நூல்களும் அகத்தேவைகளுக்கான அறம்சார் நூல்களும் நம் முன் பக்கங்களாய் விரிந்து கிடக்கின்றன. மனிதன் இரு கால்களை ஊன்றி நடக்கப்பழகியதில் இருந்து பெற்ற வளர்ச்சிக்கு இன்னும் முடிவில்லை. நடை ஒன்று தான் நம் உடல் நலம் பேணும் பயிற்சிகளில் முதன்மையான ஒன்று என்று மருத்துவர்கள் வலியுறுத்துகிறார்கள். அது புறநடை. அதுபோல் இளமையில் கற்கத் தொடங்கிய அகநடைப் பயிற்சி காலம் முழுவதும் தொடர வேண்டிய ஒன்றாக இருக்கிறது. இளமையில் கற்றல் என்பது இளமையாகவே இருக்க உதவும் கலையாக கல்வி மலர்கிறது என்பதை உணர்த்துகிறது.

8. உள்ளத்தேவைகளுக்காக நம் முன் இருப்பவை எவை?

(A) கல்வி
(B) அறிவுசார் நூல்கள்
(C) அற நூல்கள்
(D) கலைக்கூடங்கள்
(E) விடை தெரியவில்லை

9. இளமையாக இருக்க உதவும் கலை எது?

(A) அகநடைப் பயிற்சி
(B) புறநடைப்பயிற்சி
(C) மருத்துவம்
(D) கல்வி
(E) விடை தெரியவில்லை

10. மருத்துவர்கள் வலியுறுத்தும் பயிற்சிகளில் முதன்மையானது எது?

(A) புறநடைப்பயிற்சி

(B) அகநடைப்பயிற்சி

(C) மூச்சுப்பயிற்சி

(D) வாசிப்புப்பயிற்சி

(E) விடை தெரியவில்லை

11. வாழ்நாள் காலம் முடியும் வரை பின்பற்றவேண்டிய ஒன்று எது?

(A) புறநடைப்பயிற்சி

(B) அகநடைப்பயிற்சி

(C) வாசிப்புப்பயிற்சி

(D) ஒழுக்க நெறிகள்

(E) விடை தெரியவில்லை

12. கற்க வேண்டும் என்ற அவசியம் வருகின்ற போது நாம் எவ்வாறு மாறுகிறோம்?

(A) படிப்பாளிகளாக

(B) அறிஞர்களாக

(C) ஆரோக்கியமாக

(D) இளமையாக

(E) விடை தெரியவில்லை

13. ‘மீதூண் விரும்பேல்’ - என்ற ஆத்திச்சூடிக்குத் தொடர்புடைய பழமொழியைக் கண்டறிக.

- (A) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
- (B) நீரடித்து நீர் விலகாது
- (C) உப்பிட்டவரை உள்ளளவும் நினை
- (D) நொறுங்கத் தின்றால் நூறு வயது
- (E) விடை தெரியவில்லை

14. புவியியல் மற்றும் சுரங்க ஆணையர் அலுவலகத்தில் உள்ள வேதியியல் ஆய்வகம் ரூபாய் 2 கோடி செலவில் மேம்படுத்தி புதுப்பிக்கப்படும் என்னும் அறிவிப்பு எத்துறைச் சார்ந்ததென்று கண்டறிக?

- (A) இயற்கை வளங்கள் துறை
- (B) உயர்கல்வித் துறை
- (C) சுற்றுச்சூழல் துறை
- (D) வனத்துறை
- (E) விடை தெரியவில்லை

15. சரியான தொடரைக் கண்டறிக.

(A) கிளைகள் முறிந்து விழுந்தது.

(B) மரம் வேகமாக வளர்ந்தன.

(C) குரங்குகள் மரத்திற்கு மரம் தாவின.

(D) யானைகள் குட்டிகளுடன் சென்றது.

(E) விடை தெரியவில்லை

16. பொருத்தமான காலத்தைச் சுட்டுக :

"கோவலன் மதுரை மாநகருக்குள் செல்கிறான்".

(A) இறந்தகாலம்

(B) நிகழ்காலம்

(C) எதிர்காலம்

(D) கூதிர்காலம்

(E) விடை தெரியவில்லை

17. புல்வாய், நவ்வி, உழை ஆகியவற்றின் பெண்ணைக் குறிக்கும் சொல்லைக் கண்டறிக.

(A) பிணை

(B) நாகு

(C) அளகு

(D) பெட்டை

(E) விடை தெரியவில்லை

18. உதகை – என்ற மரூஉ சொல்லின் ஊர்ப் பெயரைக் கண்டறிக.

(A) ஒரு கை மண்டலம்

(B) உதக மண்டலம்

(C) ஊத்துக் கோட்டை

(D) மலைநாடு

(E) விடை தெரியவில்லை

19. பிழை திருத்துக.

மனிதன் மொழியின் வளர்ச்சி கண்டு, அது எவ்வளவு அருமையான கருவி என்பதை உணர்ந்தான்.

(A) அது

(B) அஃது

(C) இது

(D) இஃது

(E) விடை தெரியவில்லை

20. இவனுக்கு வீடு ஒன்று ———— இரண்டு இருக்கிறது.

(A) மற்றும்

(B) இல்லை

(C) அல்லது

(D) தான்

(E) விடை தெரியவில்லை

21. எதிர்ச்சொற்களைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அணுகு | 1. | தெளிவு |
| (b) | ஐயம் | 2. | சோர்வு |
| (c) | ஊக்கம் | 3. | பொய்மை |
| (d) | உண்மை | 4. | விலகு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

22. எதிர்ச்சொல்லைக் கண்டறிக :

எந்தை

(A) நுந்தை
(B) தந்தை
(C) நொந்தை
(D) எந்தாய்
(E) விடை தெரியவில்லை

23. பிழையான தொடரைக் கண்டறிக.

(A) போர்க்களத்தில் வீரர்கள் கலத்தில் நீர் அருந்தினர்.
(B) அரசாணையைக் கண்டதும் ஆனைகள் காட்டிற்குள் விடப்பட்டன.
(C) குறைவில்லாமல் உண்ட நாய் குரைத்தது.
(D) பெருமலையைக் கண்டதும் மக்கள் மழைத்து போய்விட்டனர்.
(E) விடை தெரியவில்லை

24. "EVILDOER" என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு தமிழ்ச்சொல் கண்டறிக.

(A) அளவை

(B) அறிவாளர்

(C) கெடுப்பவர்

(D) நெஞ்சுகலப்பவர்

(E) விடை தெரியவில்லை

25. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான சொல்லை அறிந்து எழுதுக.

'Omniscient'

(A) திடுக்கிட்ட நிலை

(B) குழப்ப நிலை

(C) எதுவும் அறியாத நிலை

(D) எல்லாம் அறிந்த நிலை

(E) விடை தெரியவில்லை

26. மறு ஆய்வு மனு என்பதை ஆங்கிலத்தில் ———— என்றழைப்பர்.

(A) Writ Petition

(B) Habeas Corpus

(C) Review Petition

(D) Revision Petition

(E) விடை தெரியவில்லை

27. போர்டு, அரசினர் இவர்களிடமிருந்து வரும் முக்கிய கடிதக் குறிப்புக்களின் தனிப்பதிவேடு :

விதிகள் மற்றும் விதிமுறைகள் :

அரசினரிடமிருந்து வரும் முக்கியமான நேர்முகக் கடிதங்கள், கடிதக் குறிப்புகள் இவற்றிற்குத் தயக்கமில்லாமல் விடைகள் அனுப்புவதைக் கவனிப்பதற்கு இது ஏற்பட்டது. இது இணைப்பு 'ஆ' – XVI எண் படிவத்தில் வைக்கப்பட வேண்டும். இதனை நேர்முக உதவியாளர் வைத்துவருவார், உடனுக்குடன் தயக்கமில்லாமல் இத்தகைய கடிதக் குறிப்புகளுக்கும் நினைவூட்டுகளுக்கும் விடை செல்வதை அவர் நேர்முகமாகக் கவனித்து வருவார். மாவட்ட ஆட்சியர் தலைமை இடத்தில் இருக்கும்போது அன்றாடம் அவருடைய பார்வைக்கு இது அனுப்பப்படவேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவரின் அன்றாடப் பார்வைக்கு அனுப்ப வேண்டிய பதிவேட்டைக் கண்டறிக.

(A) வருகைப் பதிவேடு

(B) தாமத வருகைப் பதிவேடு

(C) கடிதக் குறிப்புக்களின் தனிப்பதிவேடு

(D) சுத்த நகல் பதிவேடு

(E) விடை தெரியவில்லை

28. உயிரியியலில் "Abulomania" என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு இணையான கலைச்சொல் தருக.

(A) படுகுழி

(B) மிகுதியான கட்டுப்பாடுகள்

(C) உண்ணிபோன்ற

(D) மனநோய்

(E) விடை தெரியவில்லை

29. பிழையற்ற அஃறிணைப் பன்மைத் தொடரைக் கண்டறிக.

(A) அவள் அல்லள்

(B) மரம் அன்று

(C) அவை அல்ல

(D) அவன் அல்ல

(E) விடை தெரியவில்லை

30. சரியான தொடரைத் தேர்வு செய்க.

(A) மாடுகள் மேய்ந்தது

(B) பறவைகள் பறந்தது

(C) மரம் வளர்ந்தன

(D) செடி கொடிகள் காற்றில் அசைந்தன

(E) விடை தெரியவில்லை

31. பிழையற்ற தொடரைக் கண்டறிக.

(A) ஆடூஉ வந்தாள்

(B) மகடூ வந்தான்

(C) மகடூ வந்தாள்

(D) சாத்தி வந்தான்

(E) விடை தெரியவில்லை

32. ‘வேர்க்குரு’ என்னும் சொல்லின் பேச்சுவழக்கு

(A) வேர்குறு

(B) வேர்க்குறு

(C) வேர்வை

(D) வியர்வை

(E) விடை தெரியவில்லை

33. காகத்திற்கு உரிய மற்றொரு பெயர்

(A) புட்டில்

(B) புட்டி

(C) புட்டம்

(D) புட்டகம்

(E) விடை தெரியவில்லை

34. அன்புக்குரியவரின் துன்பம் கண்டு பெருகும் கண்ணீர் ———— என்றழைப்பர்.

(A) புண்கணீர்

(B) புங்கணீர்

(C) புயங்கணீர்

(D) புன்கணீர்

(E) விடை தெரியவில்லை

35. 'இலஞ்சி' என்ற சொல் எம்மொழிச் சொல்லென்று கண்டறிக.

(A) டச்சு

(B) பிரெஞ்சு

(C) போர்ச்சுகீசியம்

(D) தமிழ்

(E) விடை தெரியவில்லை

36. சுருக்கக் குறியீட்டு விளக்கம்.

உத்தமம்

(A) உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றம்

(B) உலகத் தமிழ் மன்றம்

(C) உலகத் தமிழாராய்ச்சி மன்றம்

(D) உலகத் தமிழ்ச் சங்கம்

(E) விடை தெரியவில்லை

37. தமிழ்ச் சொல்லைக் கண்டறிக.

(A) சாவி

(B) பொத்தான்

(C) சோப்பு

(D) பிண்டம்

(E) விடை தெரியவில்லை

38. "இரவில் மாட்டிய இலங்குசுடர் நெகிழி

உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும் துறை....," – இச்சங்கச் செய்யுளை இயற்றிய ஆசிரியரைக் கண்டறிக.

(A) உறையூர் முதுகொற்றனார்

(B) உறையூர் முதுகூற்றனார்

(C) உருத்திரங்கண்ணனார்

(D) உறையூர் இளம்பொன் வாணிகனார்

(E) விடை தெரியவில்லை

39. BLOGGER–பொருத்தமான தமிழ்ச் சொல்லைத் தேர்க.

(A) வலையொளி

(B) வலைப்பதிவர்

(C) காணொளி படைப்பாளர்

(D) தள வமைப்பாளர்

(E) விடை தெரியவில்லை

40. பிறமொழிச் சொல்லைத் தேர்ந்தெடு

(A) நிறைவு

(B) வெளியீடு

(C) வாடகை

(D) ஒழுங்கு

(E) விடை தெரியவில்லை

41. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Bracings | 1. | பைஞ்சுதை |
| (b) | Briquette | 2. | மெல்லுறை |
| (c) | Cement | 3. | கட்டுச்சட்டங்கள் |
| (d) | Veneer | 4. | கட்டி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

42. உறுதிக் கூற்று : ஆ, ஓ, எ, ஏ, யா ஆகிய எழுத்துகள் சொற்களோடு சேர்ந்து வரும் இடங்களில் வினாக்குறி இட வேண்டும்.

காரணம் : ஏனெனில் இவை வினாச்சொற்கள்.

(A) உறுதிக்கூற்று சரி காரணம் சரி

(B) உறுதிக்கூற்று சரியன்று காரணம் சரி

(C) உறுதிக்கூற்று சரி காரணம் சரியன்று

(D) உறுதிக்கூற்று, காரணம் இரண்டும் சரியன்று

(E) விடை தெரியவில்லை

43. பிறைக் குறியை உள்ளடக்கப் பயன்படும் நிறுத்தற்குறியீடு எது?

(A) விடுகுறி

(B) உடுக்குறி

(C) மேற்கோள் குறி

(D) பகர அடைப்புக் குறி

(E) விடை தெரியவில்லை

44. தேவநேயப்பாவாணர் 'கூட்டுக்கிளவியப் புணர் வாக்கியம்' என்று எதனைக் கூறுகிறார்?

(A) மாறுபட்ட நிலைகளை

(B) ஒரு எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடிதலை

(C) சொற்பொருள் கூறுமிடத்து

(D) ஒப்புமைப்படுத்துதலை

(E) விடை தெரியவில்லை

45. பொருத்துக :

(a) கடற்கரைச் சாலை — 1. ஏழாம் வேற்றுமைத்தொகை மூன்றாம் வேற்றுமை உருபும்

(b) புதுமனைப் புகுவிழா — 2. பயனும் உடன்தொக்க தொகை

(c) உரிமைக் குரல் — 3. ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

(d) பருத்தித் துணி — 4. நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

46. பொருள் கண்டறிக :

ம, மா

(A) வண்டு, ஆகாயம்

(B) இயமன், இளமை

(C) மண், மான்

(D) இயமன், வண்டு

(E) விடை தெரியவில்லை

47. னகர ணகர நகர வேறுபாட்டில் – பொருத்துக.

(a) அன்னாள் — 1. முற்காலத்தில்

(b) உன்னல் — 2. என்று சொல்லாள்

(c) முன்னாள் — 3. நினைத்தல்

(d) என்னாள் — 4. அவள்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

48. கீழ்க்கண்டவற்றுள் தவறான ஒன்றைத் தேர்வு செய்யவும்.

(1) அன்பு இருப்பது தான் உயிருள்ள உடல்

(2) அன்பு இல்லாதது உயிரற்ற உடல்

(3) அன்பு உடையவர்கள் தம் உடலும் பிறர்க்கே என்பர்

(4) அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் தமக்கே என்பர்

(A) (1) மட்டும்

(B) (2) மட்டும்

(C) (3) மட்டும்

(D) (4) மட்டும்

(E) விடை தெரியவில்லை

49. "அன்றே யொழிய விடல்" என வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

(A) அன்றறிவாம் என்னா தறம்

(B) வினை பகை யென்றிரண்டின் எச்சம்

(C) நடுநிலை கடந்து உண்டாகும் செல்வம்

(D) முடிவும் இடையூறும் அறிந்த செயல்

(E) விடை தெரியவில்லை

50. கிளைஞரை அளக்கும் கோல் எது?

(A) நமக்கு வரும் துன்பம்

(B) இடுக்கண் களையும் நட்பு

(C) நட்பாங் கிழமை

(D) கீழ்ந்திடா நட்பு

(E) விடை தெரியவில்லை

51. தொழில்நுட்பச் சொற்களைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Nautical mile | 1. | மணல் தொடுவரை |
| (b) | Natric horizon | 2. | நெப்டியூனின் துணைக்கோள் |
| (c) | Narbonnaise | 3. | 1852 மீ |
| (d) | Nalad | 4. | மழை புயற்காற்று |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

52. கீழ்க்காணும் கலைச்சொற்களைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Nanotechnology | 1. | அறிவாளர் |
| (b) | Biotechnology | 2. | விண்வெளித் தொழில்நுட்பம் |
| (c) | Spacetechnology | 3. | உயிர்த் தொழில்நுட்பம் |
| (d) | Intellectual | 4. | மீநுண் தொழில்நுட்பம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

53. பின்வரும் பழமொழி உணர்த்திடும் சரியானவற்றைக் குறிப்பிடுக.

"எரு கெட்டாருக்கும் எட்டே கடுக்காய், இளம்பிள்ளை

தாய்க்கும் எட்டே கடுக்காய்".

(a) இப்பழமொழி வேளாண்மை சார்ந்தது.

(b) எரு கெட்டார் என்பது மலச்சிக்கல் கொண்டவர்களை குறிக்கிறது.

(c) கடுக்காய் மலச்சிக்கலுக்கு சிறந்த மருந்து.

(d) பிள்ளை பெற்ற தாய்க்கும் பயன்படும்.

(A) (b), (c), (d) - சரி

(B) (a), (b), (c) - சரி

(C) அனைத்தும் சரி

(D) அனைத்தும் தவறு

(E) விடை தெரியவில்லை

54. பொருத்துக :

| அடி | | தாவரம் |
|---|---|---|
| (a) தட்டு | 1. | வேம்பு |
| (b) கழி | 2. | மூங்கில் |
| (c) கழை | 3. | சோளம் |
| (d) அடி | 4. | கரும்பு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

55. யானையின் ஒலி மரபைக் கண்டறிக.

(A) அலப்பும்

(B) பிளிறும்

(C) எக்காளமிடும்

(D) கதறும்

(E) விடை தெரியவில்லை

56. 'மானின்' தொகை மரபுச் சொல்லைக் கண்டறிக.

(A) மந்தை

(B) நிரை

(C) கணம்

(D) கூட்டம்

(E) விடை தெரியவில்லை

57. வெற்றி, வீரம், வலி ஆகிய பொருள்களைத் தரும் சொல்

(A) விறல்

(B) வென்றி

(C) விரல்

(D) வறம்

(E) விடை தெரியவில்லை

58. பிரித்து எழுதுக :

"வேணன்மை" என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.

(A) வேணன் + மை

(B) வேண் + அன்மை

(C) வேண் + நன்மை

(D) வேள் + நன்மை

(E) விடை தெரியவில்லை

59. சேர்த்து எழுதுக :

"அது + அன்று" என்னும் சொல்லைச் சேர்த்து எழுதுக.

(A) அதுவன்று

(B) அதுஅன்று

(C) அதினன்று

(D) அதான்று

(E) விடை தெரியவில்லை

60. சேர்த்து எழுதுக :

உள் + மனம்

(A) உன்மனம்

(B) உண்மனம்

(C) உள்மனம்

(D) உம்மனம்

(E) விடை தெரியவில்லை

61. ஒற்றுப்பிழையைச் சரி செய்க :

வள்ளலார் அருளிய வழிகளை கடைபிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.

(A) வள்ளலார் அருளிய வழிகளை கடைப்பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.

(B) வள்ளலாரருளிய வழிகளைக் கடைபிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.

(C) வள்ளலார் அருளிய வழிக்களைக் கடைப்பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.

(D) வள்ளலார் அருளிய வழிகளைக் கடைப் பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.

(E) விடை தெரியவில்லை

62. பிழையற்ற தொடரைத் தேர்க :

(A) அமைச்சர் பதவியேற்றவுடன் பாராட்டுகள் குவிந்தன. தொண்டர்கள் பரிசுப் பொருட்களைக் குவித்தனர்.

(B) அமைச்சர் பதவியேற்றவுடன் பாராட்டுகள் குவித்தனர். தொண்டர்கள் பரிசுப் பொருட்களைக் குவித்தனர்.

(C) அமைச்சர் பதவியேற்றவுடன் பாராட்டுகள் குவித்தனர். தொண்டர்கள் பரிசுப் பொருட்களைக் குவிந்தனர்.

(D) அமைச்சர் பதவியேற்றவுடன் பாராட்டுகள் குவிந்தனர். தொண்டர்கள் பரிசுப் பொருட்களைக் குவிந்தனர்.

(E) விடை தெரியவில்லை

63. மோந்து பார்த்தால் வாடிவிடும் அனிச்சம் மலர். என்ன செய்தால் வாடுவர் விருந்தினர்?

(A) வரவேற்கவில்லையானால்

(B) இனியமொழி பேசவில்லையானால்

(C) கடுஞ்சொற்கள் பேசினால்

(D) முகம் திரிந்து நோக்கினால்

(E) விடை தெரியவில்லை

64. 'இடியோசை கேட்ட நாகம்போல'-என்ற உவமைத்தொடர் உணர்த்தும் பொருளைத் தேர்ந்தெடுக்க :

(A) வன்மம்

(B) ஏக்கம்

(C) மிரட்சி

(D) திரட்சி

(E) விடை தெரியவில்லை

65. நீறு பூத்த நெருப்புப்போல

– நீறு என்பதன் பொருள் என்ன?

(A) சாம்பல்

(B) மண்

(C) நீர்

(D) கலவை

(E) விடை தெரியவில்லை

66. "Assailant" - என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல்.

(A) தாக்குபவர்

(B) முன் மரபினர்

(C) உறவினர்

(D) புனைவு நபர்

(E) விடை தெரியவில்லை

67. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Arete | 1. | களிமண் பாறை |
| (b) | Arenaceous rock | 2. | கத்திமுனைக் குன்று |
| (c) | Argillaceous rock | 3. | இடையாழ கிரானைட்டு பாறை |
| (d) | Aplite | 4. | மணற் பாறை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

68. 'அடவி' என்ற சொல்லின் பொருள்

(A) ஆறு

(B) பக்கம்

(C) காடு

(D) நிலம்

(E) விடை தெரியவில்லை

69. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். (குறள்-559)

இக்குறட்பாவில் "மிகுதி" என்னும் பொருளை உணர்த்தும் சொல்லைக் கண்டறிக.

(A) பரியது

(B) கூர்

(C) கோட்ட

(D) யானை

(E) விடை தெரியவில்லை

70. .............நாற்றிசையும் செல்லாத நாடுஇல்லை – அந்நாடு

வேற்றுநாடு ஆகா தமவேஆம் ஆயினால்

ஆற்றுணா வேண்டுவது இல்

(பழமொழி நானூறு - 4)

இப்பாடலில் இன எழுத்து இடம்பெற்ற சொல் எது?

(A) நாடு இல்லை

(B) தமவே ஆம்

(C) ஆற்றுணா

(D) வேண்டுவது

(E) விடை தெரியவில்லை

71. உறுதிக் கூற்று : சுட்டெழுத்துகளை இடச்சுட்டுக்கள் என்றும் குறிக்கலாம்.

காரணம் : அகம், புறம் எனச் சுட்டெழுத்துகள் நிற்கும் இடத்தைப் பொறுத்துப் பெயர் குறிப்பிடப்படுகின்றது.

(A) உறுதிக்கூற்று சரி காரணம் தவறு

(B) இரண்டும் தவறு

(C) உறுதிக்கூற்று தவறு காரணம் சரி

(D) இரண்டும் சரி

(E) விடை தெரியவில்லை

72. தொல்காப்பியர் குறிப்பிடும் உவன், உவள், உவர், உது, உவை என்பன ________.

(A) அண்மைச் சுட்டு

(B) இடைநிலைச் சுட்டு

(C) சேய்மைச் சுட்டு

(D) சுட்டுத் திரிபு

(E) விடை தெரியவில்லை

73. கூற்று [A] : திருப்புகழில் அருணகிரிநாதர் தப்பாட்ட இசை குறித்துப் பதிவு செய்துள்ளார்.

காரணம் [R] : புலியைப் போன்று கருப்பும் மஞ்சளுமான வண்ணக் கோடுகளிட்டு, வீரத்தைக் காட்டி தப்பு இசைக்கேற்பத் தப்பாட்டத்தை ஆடுவர்.

(A) கூற்று [A] சரி; காரணம் [R] தவறு, [R] என்பது [A] இன் சரியான விளக்கம் அல்ல

(B) கூற்று [A] சரி ; காரணம் [R] சரி, [R] என்பது [A] இன் சரியான விளக்கம்

(C) கூற்று [A] தவறு ; காரணம் [R] தவறு

(D) கூற்று [A] தவறு ; காரணம் [R] சரி

(E) விடை தெரியவில்லை

74. கீழ்க்கண்டவற்றுள் சரியானவற்றைத் தேர்வு செய்க.

தென் திராவிட மொழிகள்

(1) தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம்

(2) தமிழ், கன்னடம், மலையாளம், குடகு

(3) தமிழ், மலையாளம், குடகு, கூயி

(4) தமிழ், குடகு, கூயி, குரூக்

(A) (1) மட்டும்

(B) (2) மட்டும்

(C) (3) மட்டும்

(D) (4) மட்டும்

(E) விடை தெரியவில்லை

75. மரபுத் தொடர்களைப் பொருளோடு பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கானல் நீர் | 1. | விட்டுவிடுதல் |
| (b) | கரையேறுதல் | 2. | உறுதியாகப்பற்றுதல் |
| (c) | கைகழுவுதல் | 3. | கிடைக்காத ஒன்று |
| (d) | குரங்குப்பிடி | 4. | துன்பத்திலிருந்து மீளுதல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 1 | 4 | 2 | 3 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

76. 'கடுக்காய்க் கொடுத்தல்' என்னும் மரபுத்தொடரின் சரியான பொருளைக் கண்டறிக.

(A) மாற்றிப் பேசுதல்

(B) ஏமாற்றுதல்

(C) குறுக்கிடுதல்

(D) பிடிவாதம் காட்டுதல்

(E) விடை தெரியவில்லை

77. 'Presbyoesophagus' எனும் கலைச்சொல்லுக்கு இணையான சொல்லைக் கண்டறிக.

(A) முதியோரின் கேளா நிலை

(B) உணவுக்குழல் தளர்ச்சி அடைதல்

(C) வெள்ளெழுத்து முதிர்வு அடைதல்

(D) மார்சளிக் காய்ச்சல்

(E) விடை தெரியவில்லை

78. வணிக மேலாண்மை குறித்த ஆங்கிலச் சொற்களைத் தமிழ்க் கலைச்சொற்களோடு பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Barter | 1. | வாராக் கடன் |
| (b) | Bargaining | 2. | பண்டமாற்று |
| (c) | Bad debt | 3. | கைப்பற்றப்பட்ட நிறுவனம் |
| (d) | Acquiree | 4. | பேரம் பேசுதல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

79. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" – இப்பாடல் வரியில் "கேளிர்" என்னும் சொல்லிற்கு எதிர்ச்சொல் தருக.

(A) சகோதரி

(B) நண்பர்

(C) உறவினர்

(D) பகைவர்

(E) விடை தெரியவில்லை

80. ஓரெழுத்து ஒரு மொழியைப் பொருத்துக :

(a) க — 1. உறுதி

(b) கா — 2. கொள்ளுகை

(c) தே — 3. பறவை

(d) நி — 4. தராசு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

81. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அநுராகம் | 1. | பாவம் |
| (b) | அனுராகம் | 2. | மான் |
| (c) | ஏணம் | 3. | ஒத்தகாதல் |
| (d) | ஏனம் | 4. | மிக்க ஆசை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

(E) விடை தெரியவில்லை

82. "அப்பாவி" எனும் சொல் பிழை எனில், அச்சொல்லின் திருத்தச் சொல்லைக் காண்க.

(A) அடப்பாவி

(B) அற்பாவி

(C) அற்ப பாவி

(D) அற்ப ஆவி

(E) விடை தெரியவில்லை

83. "மனைக்கு விளக்கம் மடவார் ; மடவார்

தனக்குத் தகைசால் புதல்வர்;

– என்ற அடிகள் இடம்பெறும் நீதி நூலைக் கண்டறிக.

(A) நாலடியார்

(B) திருக்குறள்

(C) இன்னா நாற்பது

(D) நான்மணிக்கடிகை

(E) விடை தெரியவில்லை

84. "ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கமுடைமை' என்ற அடி இடம்பெற்றுள்ள நூல்

(A) நாலடியார்

(B) முதுமொழிக்காஞ்சி

(C) பழமொழி நானூறு

(D) இன்னா நாற்பது

(E) விடை தெரியவில்லை

85. ஏலாதியில் கூறப்பட்டுள்ள சமணத்திற்கே உரிய அறக்கருத்து

(A) தீண்டாமை

(B) ஒழுக்கமுடைமை

(C) கொல்லாமை

(D) அறிவுடைமை

(E) விடை தெரியவில்லை

86. பொருளறிந்து பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | ஓதுதல் | 1. | திருத்தமாகச் சொல்லுதல் |
| (b) | மொழிதல் | 2. | பலர் அறியச் சொல்லுதல் |
| (c) | விளம்புதல் | 3. | காதில் மெல்லச் சொல்லுதல் |
| (d) | உளறுதல் | 4. | ஒன்றுக்கொன்று சொல்லுதல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

87. பழமொழியினை நிறைவு செய்க :

"மாலைசுற்றிப் பிறந்த பிள்ளை ________ ஆகாது".

(A) அம்மாவுக்கு

(B) தாத்தாவுக்கு

(C) தங்கைக்கு

(D) மாமனுக்கு

(E) விடை தெரியவில்லை

88. சரியான திருக்குறளைக் கண்டறிக.

(A) சொல்லுக சொல்லில் சொல்லற்க பயனுடைய
சொல்லில் பயன்இலாச் சொல்

(B) சொல்லில் சொல்லுக சொல்லற்க பயனுடைய
சொல்லில் பயன்இலாச் சொல்

(C) சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லில்
சொல்லற்க பயன்இலாச் சொல்

(D) சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல்

(E) விடை தெரியவில்லை

89. செயப்பாட்டுவினைத் தொடரைக் கண்டறிக.

(A) குமரன் பாடம் பயின்றான்

(B) இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் இயற்றினார்

(C) கபிலர் குறிஞ்சிப்பாட்டு இயற்றினார்

(D) தை கொண்டாடப் பெற்றது

(E) விடை தெரியவில்லை

90. குமணன் நடந்தான் – இத்தொடர் உணர்த்தும் வினையைக் கண்டறிக.

(A) தன்வினை

(B) பிறவினை

(C) பொதுவினை

(D) எதிர்மறை வினை

(E) விடை தெரியவில்லை

91. திருமால் குன்றம் உயர்ந்தோங்கி நிற்கின்றது – இத்தொடரின் ஒருபொருட் பன்மொழி.

(A) திருமால் குன்றம்

(B) உயர்ந்து ஓங்கிய

(C) ஓங்கி நிற்கும்

(D) குன்றம் உயர்ந்து

(E) விடை தெரியவில்லை

92. இருபொருள் குறிக்கும் சொற்களை பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கறுத்து | 1. | கொல்லல், கோளிழைத்தல் |
| (b) | கிராய் | 2. | கோபித்து, சினந்து |
| (c) | கோறல் | 3. | பிணக்கு, மாறுபாடு |
| (d) | உறையல் | 4. | கருஞ்சேற்று நிலம், புற்கரடு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

93. 'சொல்' என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைக் கண்டறிக.

(A) சொல்லாமை

(B) சொல்லா

(C) சொல்லிய

(D) சொல்லுகின்ற

(E) விடை தெரியவில்லை

94. "அறியாத பையன்" – என்பது எவ்வகை பெயரெச்சத்தைக் குறிக்கிறது?

(A) இறந்தகாலப் பெயரெச்சம்

(B) எதிர்காலப் பெயரெச்சம்

(C) குறிப்புப் பெயரெச்சம்

(D) தெரிநிலைப் பெயரெச்சம்

(E) விடை தெரியவில்லை

95. 'சிறிய கடிதம்' – இத்தொடரின் எச்ச வகை கண்டறிக.

(A) இறந்தகாலப் பெயரெச்சம்

(B) நிகழ்காலப் பெயரெச்சம்

(C) குறிப்புப் பெயரெச்சம்

(D) எதிர்காலப் பெயரெச்சம்

(E) விடை தெரியவில்லை

96. ஆங்கிலச் சொல்லைக் கண்டறிக.

(A) அலமாரி

(B) துட்டு

(C) லாந்தர்

(D) உயில்

(E) விடை தெரியவில்லை

97. கண்ணதாசன் குறித்த பின்வரும் கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்ந்தெடு :

(i) 1949 ஆம் ஆண்டு கலங்காதிரு மனமே என்ற பாடலை எழுதித் திரைப்படப் பாடலாசிரியரானார்.

(ii) இயேசு காவியம் என்னும் நூலுக்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றார்.

(iii) இவர் கவியரசு என்னும் சிறப்புப் பெயராலும் அழைக்கப்படுகிறார்.

(A) (ii) மற்றும் (iii) மட்டும்

(B) (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (i) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

98. வேலுநாச்சியார் கற்றறிந்த மொழிகளைக் கண்டறிக :

(A) தமிழ், ஆங்கிலம், உருது, பிரெஞ்சு

(B) தமிழ், ஆங்கிலம், இந்தி, கிரேக்கம்

(C) தமிழ், ஆங்கிலம், உருது, சீனம்

(D) தமிழ், ஆங்கிலம், உருது, மலையாளம்

(E) விடை தெரியவில்லை

99. உவமைத் தொடர்களுக்கு ஏற்ற சரியான பொருளைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | ஆண்டிகள் மடம் கட்டியது போல | 1. | போலி |
| (b) | ஆற்றில் கரைத்த புளி போல | 2. | மிக அரிது |
| (c) | கரடி பிறை கண்டது போல | 3. | பயனற்ற செயல் |
| (d) | உள்ளீடற்ற புதர் போல | 4. | உருவாகாத் திட்டம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

100. "நீர்மேல் எழுத்துப்போல" என்ற உவமைத்தொடரின் சரியான பொருளைத் தேர்க :

(A) இயலாமை

(B) நிலைத்தன்மை

(C) உறுதித்தன்மை

(D) நிலையற்ற தன்மை

(E) விடை தெரியவில்லை

# பகுதி-ஆ – பொது அறிவு மற்றும் பகுதி-இ – திறனறிவு மற்றும் மனக்கணக்கு நுண்ணறிவு

# Part-B – General Studies and Part-C – Aptitude and Mental Ability

**வினாக்கள் : 101–200** மொத்த மதிப்பெண்கள் : **150**

**Questions : 101–200** **Total Marks : 150**

---

101. Which among the following statement(s) is/are true about Indian National Congress?
   (i) The Father of Indian National Congress is A.O. Hume.
   (ii) The first President of Indian National Congress was S.N. Banerjee.
   (iii) S.N. Banerjee founded Indian National Liberation Federation.
   (A) (i) only
   (B) (i) and (iii) only
   (C) (i) and (ii) only
   (D) (ii) and (iii) only
   (E) Answer not known

   பின்வருவனவற்றுள் இந்திய தேசியக் காங்கிரஸ் பற்றிய சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க :
   (i) இந்திய தேசியக் காங்கிரஸின் தந்தை A.O. ஹியூம் ஆவார்.
   (ii) இந்திய தேசியக் காங்கிரஸின் முதல் தலைவர் S.N. பானர்ஜி ஆவார்.
   (iii) S.N. பானர்ஜி இந்திய தேசிய விடுதலை அமைப்பை நிறுவினார்.
   (A) (i) மட்டும்
   (B) (i) மற்றும் (iii) மட்டும்
   (C) (i) மற்றும் (ii) மட்டும்
   (D) (ii) மற்றும் (iii) மட்டும்
   (E) விடை தெரியவில்லை

102. Tamil Nadu Government celebrated April 29 to May 5 to mark Birth anniversary of

(A) Pavendar Bharathidasan

(B) Perunthalaivar Kamarajar

(C) Pasumpon Muthu Ramalinganar

(D) Peraringar Anna

(E) Answer not known

தமிழக அரசு ஏப்ரல் 29 முதல் மே 5 ஆம் தேதி வரை இவருடைய பிறந்த நாளை கொண்டாடியது

(A) பாவேந்தர் பாரதிதாசன்

(B) பெருந்தலைவர் காமராஜர்

(C) பசும்பொன் முத்துராமலிங்கனார்

(D) பேரறிஞர் அண்ணா

(E) விடை தெரியவில்லை

103. Match the following with the schemes

| | | | |
|---|---|---|---|
| (a) | Mathi Bazar | 1. | Clean energy |
| (b) | Pasumai Veedugal Thittam | 2. | Skill development |
| (c) | Naan Mudalvan | 3. | Poverty Eradication |
| (d) | Aajeevika | 4. | SHG |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) Answer not known

பின்வருவனவற்றை அவற்றின் திட்டங்களுடன் பொருத்தவும் :

| | | | |
|---|---|---|---|
| (a) | மதி பஜார் | 1. | சுத்தமான எரிசக்தி |
| (b) | பசுமை வீடுகள் திட்டம் | 2. | திறன் மேம்பாடு |
| (c) | நான் முதல்வன் | 3. | வறுமை ஒழிப்பு |
| (d) | அஜீவிகா | 4. | சுய உதவிக்குழு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

104. Match correctly the books and the Author name :

| | | | |
|---|---|---|---|
| (a) | Thirukkural Uraivalam | 1. | Va.Se. Kulanthai Samy |
| (b) | Thirukkural nunporul malai | 2. | Ki.Va. Jeganathan |
| (c) | Thirukkural Araichi pathippu | 3. | Karirathina Kavirayar |
| (d) | Vazhum Valluvam | 4. | Thandapani Thesigar |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

(E) Answer not known

புத்தகங்களையும் ஆசிரியரின் பெயரையும் சரியாகப் பொருத்தவும் :

| | | | |
|---|---|---|---|
| (a) | திருக்குறள் உரைவளம் | 1. | வ.செ. குழந்தை சாமி |
| (b) | திருக்குறள் நுண்பொருள் மாலை | 2. | கி.வா. ஜெகந்நாதன் |
| (c) | திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு | 3. | காரிரத்தினக் கவிராயர் |
| (d) | வாழும் வள்ளுவம் | 4. | தண்டபாணி தேசிகர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

105. The cost of 15 kg of sugar is Rs. 255, the cost of 17 kg of tea is Rs. 1,615 and the cost of 22 kg of rice is Rs. 572. What is the total cost of 18 kg of sugar, 21 kg of tea and 27 kg of rice?

(A) Rs. 2,442
(B) Rs. 3,923
(C) Rs. 3,003
(D) Rs. 2,932
(E) Answer not known

15 கி.கி சர்க்கரையின் விலை ரூ. 255, 17 கி.கி டீத்தூள் விலை ரூ. 1,615 மற்றும் 22 கி.கி அரிசியின் விலை ரூ. 572 எனில் 18 கி.கி சர்க்கரை, 21 கி.கி டீத்தூள் மற்றும் 27 கி.கி அரிசி ஆகியவற்றின் மொத்த விலை என்ன?

(A) ரூ. 2,442
(B) ரூ. 3,923
(C) ரூ. 3,003
(D) ரூ. 2,932
(E) விடை தெரியவில்லை

106. The income of a person is increased by 10% and then decreased by 10%. Find the change in his income in percentage.

(A) reduced by 1%
(B) increased by 1%
(C) reduced by 2%
(D) increased by 2%
(E) Answer not known

ஒரு நபரின் வருமானம் 10% உயர்த்தப்பட்டு பிறகு 10% குறைக்கப்படுகிறது எனில் அவருடைய வருமானத்தில் ஏற்படும் மாற்ற விகிதத்தைக் காண்க.

(A) 1% குறைகிறது
(B) 1% கூடுகிறது
(C) 2% குறைகிறது
(D) 2% கூடுகிறது
(E) விடை தெரியவில்லை

107. Which of the following statements are true?

Essential properties of Magnetic Materials to be an Electromagnet.

I. Narrow hysteresis loop

II. High permeability

III. High coercivity

IV. Low retentivity

(A) I alone correct

(B) Both II and III are correct

(C) II, III and IV are correct

(D) I, II and IV are correct

(E) Answer not known

சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு :

மின்காந்தங்கள் தயாரிக்கப் பயன்படும் காந்தப் பொருட்கள் பெற்றிருக்க வேண்டிய பண்புகள்.

I. குறுகலான காந்தத்தயக்க கண்ணி

II. மிகு ஊடுருவுதிறன்

III. மிகு காந்த நீக்குத்திறன்

IV. குறை தக்கவைப்புத் திறன்

(A) I மட்டும் சரி

(B) II மற்றும் III சரி

(C) II, III மற்றும் IV சரி

(D) I, II மற்றும் IV சரி

(E) விடை தெரியவில்லை

108. Choose the true statement(s) about the Fundamental Duties :

(1) To protect the Sovereignty, Unity and Integrity of India.

(2) To protect and improve the Natural Environment.

(3) To preserve the rich heritage of our composite culture.

(4) To safeguard private property.

(A) (1) and (2) only

(B) (2) and (3) only

(C) (1), (2) and (3) only

(D) (2), (3) and (4) only

(E) Answer not known

அடிப்படைக் கடமைகள் பற்றிய சரியானக் கூற்றினை/கூற்றுகளைத் தேர்ந்தெடு :

(1) இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பது.

(2) இயற்கைச் சூழலை பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவது.

(3) நம்முடைய பாரம்பரியங்களையும், பன்முகப் பண்பாட்டையும் பாதுகாப்பது.

(4) தனியார் உடைமைகளைப் பாதுகாப்பது.

(A) (1) மற்றும் (2) மட்டும்

(B) (2) மற்றும் (3) மட்டும்

(C) (1), (2) மற்றும் (3) மட்டும்

(D) (2), (3) மற்றும் (4) மட்டும்

(E) விடை தெரியவில்லை

109. Match correctly the systems/ideologies with their corresponding names :

(a) Report of Ryotwari System

(b) Panchamer Schools as Adidravida Schools

(c) Leader fought against Patriarchal Chauvinism

(d) Theory of Justice

1. Thanthai Periyar

2. Thomas Munro and Francis Ellis

3. John Rawls

4. Ayothidasar and Singaravelar

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) Answer not known

பின்வரும் திட்டங்கள் மற்றும் கருத்துகளை அது தொடர்புடைய பெயர்களுடன் சரியாக பொருத்துக :

(a) ரயத்வாரி திட்ட அறிக்கை

(b) பஞ்சமர் பள்ளிகளை ஆதிதிராவிடர் பள்ளிகள் என அழைப்பது

(c) ஆணாதிக்க பேரினவாதத்தை எதிர்த்த தலைவர்

(d) நீதிக் கோட்பாடு

1. தந்தை பெரியார்

2. தாமஸ் மன்றோ மற்றும் ப்ரான்சிஸ் எலிஸ்

3. ஜான் ரால்ஸ்

4. அயோதிதாசர் மற்றும் சிங்காரவேலர்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

110. Which of the following are correctly paired?

(1) Kurinji – Parrot

(2) Mullai – Wild-cock

(3) Marudam – Lark

(4) Neydal – Owl

(5) Palai – Pigeon

(A) (1), (2), (3), (4), (5)

(B) (2), (3), (4)

(C) (3), (4), (5)

(D) (1), (2), (5)

(E) Answer not known

பின்வருவனவற்றுள் எவை சரியாகப் பொருந்தியுள்ளன?

(1) குறிஞ்சி – கிளி

(2) முல்லை – காட்டுக் கோழி

(3) மருதம் – வானம்பாடி

(4) நெய்தல் – ஆந்தை

(5) பாலை – புறா

(A) (1), (2), (3), (4), (5)

(B) (2), (3), (4)

(C) (3), (4), (5)

(D) (1), (2), (5)

(E) விடை தெரியவில்லை

111. "Iruppu Mugam Seriththa Aenthelil Maruppin" – Identify the figure of speech used in the above line

(A) Simile

(B) Metaphor

(C) Personification

(D) Irony

(E) Answer not known

"இருப்பு முகம் செறித்த ஏந்தெழில் மருப்பின்" இப்பாடலில் பயின்று வந்துள்ள அணி

(A) உவமை அணி

(B) உருவக அணி

(C) தற்குறிப்பேற்ற அணி

(D) வேற்றுமை அணி

(E) விடை தெரியவில்லை

112. In a dice if 1 is opposite to 4 and 2 is opposite to 5, then

(A) 3 is adjacent to 4 and 6

(B) 3 is adjacent to 5 and 6

(C) 2 is adjacent to 3 and 6

(D) 1 is adjacent to 4 and 6

(E) Answer not known

ஒரு பகடையில் 1க்கு எதிரே 4 மற்றும் 2க்கு எதிரே 5 உள்ளது எனில்

(A) 3 ஆனது 4 மற்றும் 6க்கு அருகே உள்ளது

(B) 3 ஆனது 5 மற்றும் 6க்கு அருகே உள்ளது

(C) 2 ஆனது 3 மற்றும் 6க்கு அருகே உள்ளது

(D) 1 ஆனது 4 மற்றும் 6க்கு அருகே உள்ளது

(E) விடை தெரியவில்லை

113. Reason and Assertion :

Assertion [A] : Besides being a political Leader, Gopal Krishna Gokhale was a great Social Reformer.

Reason [R] : He was one of the founders of the distinguished organisation known as "The Servants of India Society".

(A) [A] is true but [R] is false
(B) [A] is false but [R] is true
(C) Both [A] and [R] are true
(D) Both [A] and [R] are false
(E) Answer not known

காரணம் மற்றும் கூற்று :

கூற்று [A] : அரசியல் தலைவர் என்பதைத் தவிர, கோபால கிருஷ்ண கோகலே ஒரு சிறந்த சமூகச் சீர்திருத்தவாதி.

காரணம் [R] : இவர் 'இந்திய சமுதாயத்தின் சேவகர்கள்' என்னும் தனித்தன்மை வாய்ந்த அமைப்பை நிறுவியவர்.

(A) கூற்று [A] சரி ஆனால் காரணம் [R] தவறு
(B) கூற்று [A] தவறு ஆனால் காரணம் [R] சரி
(C) இரண்டும் கூற்று [A] மற்றும் காரணம் [R] சரி
(D) இரண்டும் கூற்று [A] மற்றும் காரணம் [R] தவறு
(E) விடை தெரியவில்லை

114. Arrange the events in chronological order :

(1) Communal Award
(2) Gandhi Irwin Pact
(3) Chittagong outburst
(4) Poona Pact

(A) (1), (2), (3), (4)
(B) (2), (3), (4), (1)
(C) (3), (2), (1), (4)
(D) (4), (3), (2), (1)
(E) Answer not known

பின்வரும் நிகழ்வுகளை காலவரிசைப்படி அடுக்குக :

(1) வகுப்புவாதத் தீர்வு
(2) காந்தி – இர்வின் உடன்படிக்கை
(3) சிட்டகாங்க் வெடிப்பு
(4) பூனா ஒப்பந்தம்

(A) (1), (2), (3), (4)
(B) (2), (3), (4), (1)
(C) (3), (2), (1), (4)
(D) (4), (3), (2), (1)
(E) விடை தெரியவில்லை

115. Match the following :

| Acts | | | Year |
|---|---|---|---|
| (a) | Tamilnadu Consumer Protection Act | 1. | 1969 |
| (b) | Consumer Movement | 2. | 1988 |
| (c) | Tamilnadu Consumer Protection Rules | 3. | 1986 |
| (d) | The Monopolies and Restrictive Trade Practices Act | 4. | 1974 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

(E) Answer not known

சரியான விடையை பொருத்துக :

| சட்டங்கள் | | | ஆண்டு |
|---|---|---|---|
| (a) | தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் | 1. | 1969 |
| (b) | நுகர்வோர் இயக்கம் | 2. | 1988 |
| (c) | தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் | 3. | 1986 |
| (d) | ஏகபோக மற்றும் கட்டுப்பாட்டு வர்த்தக நடைமுறைகள் சட்டம் | 4. | 1974 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

116. The objectives of National Skill Development Council is / are

(i) To empower women through economic independence

(ii) To Organise Training Programmes for youths for skill development across the country

(iii) To provide monetary awards for skill certification to boost employability

(iv) To boost the productivity of the country's workforce

(A) (i), (ii) and (iii)

(B) (ii), (iii) and (iv)

(C) (i) and (ii) only

(D) (i) only

(E) Answer not known

தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் குறிக்கோள் அல்லது குறிக்கோள்கள்

(i) பொருளாதாரச் சுதந்திரம் மூலமாக மகளிர் மேம்பாடு அடையச் செய்வது

(ii) நாடு முழுவதும் உள்ள இளைஞர்களைத் திறன் மேம்பாடு அடையப் பயிற்சித் திட்டங்களை அளிப்பது

(iii) திறன் மேம்பாட்டுச் சான்றிதழ் பெற்றவர்களுக்கு பண விருதுகள் வழங்கி வேலைவாய்ப்பை அதிகப்படுத்துதல்

(iv) நாட்டின் உழைப்பாளர்களின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துதல்

(A) (i), (ii) மற்றும் (iii)

(B) (ii), (iii) மற்றும் (iv)

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (i) மட்டும்

(E) விடை தெரியவில்லை

117. Whose duties are implicity taught in Thirukkural?

(A) Men

(B) Women

(C) Citizens

(D) The King

(E) Answer not known

திருக்குறளில் யாருடைய கடமைகள் மறைமுகமாகக் கற்பிக்கப்படுகின்றன?

(A) ஆடவர்

(B) மகளிர்

(C) குடிமக்கள்

(D) அரசன்

(E) விடை தெரியவில்லை

118. A, B and C start at the same direction to run around a circular stadium. A completes a round in 252 seconds. B in 308 seconds and C in 198 seconds, all starting at the same point. After what time will they meet again at the starting point?

(A) 26 minutes 18 seconds

(B) 45 minutes

(C) 46 minutes 12 seconds

(D) 42 minutes 36 seconds

(E) Answer not known

A, B மற்றும் C ஆகியோர் ஒரே திசையில் தொடங்கி ஒரு வட்ட வடிவமான அரங்கத்தை ஒரு முறை சுற்றி வர 'A' விற்கு 252 வினாடிகளும் 'B' விற்கு 308 வினாடிகளும் 'C' விற்கு 198 வினாடிகளும் ஆகின்றன எனில் இவர்கள் எந்த நேரத்தில் தொடங்கிய நிலையில் தொடங்கிய இடத்தில் சந்திப்பார்கள்?

(A) 26 நிமிடங்கள் 18 வினாடிகள்

(B) 45 நிமிடங்கள்

(C) 46 நிமிடங்கள் 12 வினாடிகள்

(D) 42 நிமிடங்கள் 36 வினாடிகள்

(E) விடை தெரியவில்லை

119. One of the following is a mismatch :

(1) Down's Syndrome – Autosomal trisomy of $21^{st}$ chromosome

(2) Haemophilia – Sex Linked

(3) Klinefelter Syndrome – XO Complement

(4) Turner Syndrome – Female with retarded growth

(A) (3) only

(B) (1) and (3) only

(C) (2) only

(D) (1) and (2) only

(E) Answer not known

இவற்றில் ஒன்று தவறாக பொருத்தப்பட்டுள்ளது :

(1) டவுனின் குறைபாட்டு நோய் – 21 வது குரோமோசோமில் ஏற்படும் ஆட்டோசோமல் டிரைசோமி

(2) ஹீமோபிலியா – பால் இணைந்த தலைமுறை

(3) கிளின்ஃபெல்டர் குறைபாட்டு நோய் – XO நிலை

(4) டர்னரின் குறைபாட்டு நோய் – வளர்ச்சி பின்னடைந்த மகளிர்

(A) (3) மட்டும்

(B) (1) மற்றும் (3) மட்டும்

(C) (2) மட்டும்

(D) (1) மற்றும் (2) மட்டும்

(E) விடை தெரியவில்லை

120. Match the Column (A) with Column (B) :

| Column (A) Theme | | Column (B) Year | |
|---|---|---|---|
| (a) | Judicial Activism | 1. | 1976 |
| (b) | Ethical Governance (SARC) | 2. | 1997 |
| (c) | Restatement of Values of Judicial life | 3. | 1947 |
| (d) | Administrative Tribunal | 4. | 2007 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) Answer not known

கீழ்கண்ட வரிசை (A) உடன் வரிசை (B) யை பொருத்துக :

| வரிசை (A) கருப்பொருள் | | வரிசை (B) ஆண்டு | |
|---|---|---|---|
| (a) | நீதித்துறை செயற்பாடு | 1. | 1976 |
| (b) | ஆளுமையில் அறநெறி (SARC) | 2. | 1997 |
| (c) | நீதித்துறை வாழ்வின் மாண்புகளின் மறு அறிக்கை | 3. | 1947 |
| (d) | நிர்வாகத் தீர்ப்பாயம் | 4. | 2007 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

121. Assertion [A] : HIV infection more often spreads due to conscious behaviour patterns.

Reason [R] : The infection of AIDS in blood transfusion patients may occur due to poor monitoring

(A) Both [A] and [R] are not true

(B) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]

(C) Both [A] and [R] are true, and [R] is not the correct explanation of [A]

(D) [A] is true and [R] is false

(E) Answer not known

கூற்று [A] : எச்.ஐ.வி தொற்று பெரும்பாலும் உணர்வுள்ள நடத்தை முறை காரணமாக பரவுகிறது.

காரணம் [R] : இரத்தமாற்ற நோயாளிகளுக்கு எய்ட்ஸ் தொற்று மோசமான கண்காணிப்பு காரணமாக ஏற்படலாம்.

(A) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரியானதல்ல

(B) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி, மற்றும் காரணம் [R] கூற்று [A] க்கான சரியான விளக்கமாகும்.

(C) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி, காரணம் [R] கூற்று [A] க்கான சரியான விளக்கமல்ல

(D) கூற்று [A] சரி, மற்றும் காரணம் [R] தவறு

(E) விடை தெரியவில்லை

122. Which of the following is incorrectly paired?

| | | | |
|---|---|---|---|
| (1) | Coimbatore | – | Manchester of South India |
| (2) | Madurai | – | Cultural capital of Tamil Nadu |
| (3) | Namakkal | – | Rice Bowl of Tamil Nadu |
| (4) | Thanjavur | – | Egg city |

(A) (1) and (4)

(B) (1) and (2)

(C) (2) and (3)

(D) (3) and (4)

(E) Answer not known

பின்வருவனவற்றில் எது தவறாக இணைக்கப்பட்டுள்ளது?

| | | | |
|---|---|---|---|
| (1) | கோயம்புத்தூர் | – | தென்னிந்தியாவின் மான்செஸ்டர் |
| (2) | மதுரை | – | தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தலைநகரம் |
| (3) | நாமக்கல் | – | தமிழகத்தின் நெற்களஞ்சியம் |
| (4) | தஞ்சாவூர் | – | முட்டை நகரம் |

(A) (1) மற்றும் (4)

(B) (1) மற்றும் (2)

(C) (2) மற்றும் (3)

(D) (3) மற்றும் (4)

(E) விடை தெரியவில்லை

123. Assertion [A] : "All opinions are here, There is nothing that is not in it".

Reason [R] : Many of Thiruvalluvar's ideas were innovative and revolutionary compared to the prevailing policies of his time.

(A) [A] is true but [R] is false

(B) [A] is false but [R] is true

(C) Both [A] and [R] are true, [R] is the correct explanation of [A]

(D) Both [A] and [R] are true, and [R] is not the correct explanation of [A]

(E) Answer not known

கூற்று [A] : "எல்லாப் பொருளும் இதன்பா லுள,
இதன்பால் இல்லாத எப்பொருளு மில்லை"

காரணம் [R] : திருவள்ளுவரின் கருத்துகளில் பல அவர் காலத்தில் நிலவிய கொள்கைகளோடு ஒப்பிடும் போது புதுமையானவை, புரட்சிகரமானவை.

(A) [A] சரி, ஆனால் [R] தவறு

(B) [A] தவறு, ஆனால் [R] சரி

(C) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மற்றும் [R] என்பது [A]விற்கு சரியான விளக்கமாகும்

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மற்றும் [R] என்பது கூற்று [A]விற்கு சரியான விளக்கமல்ல

(E) விடை தெரியவில்லை

124. P is elder than Q. R is elder than Q but younger than P. S is elder than P but younger than T. Who is the youngest?

(A) R

(B) T

(C) Q

(D) S

(E) Answer not known

P என்பவர் Q ஐ விட பெரியவர். R என்பவர் Q-வை விட பெரியவர் ஆனால் Pஐ விட சிறியவர். S என்பவர் P ஐ விட பெரியவர் ஆனால் Tஐ விட சிறியவர். இதில் யார் மிகச்சிறியவர்?

(A) R

(B) T

(C) Q

(D) S

(E) விடை தெரியவில்லை

125. Which of the statement(s) is/are correct?

(i) Satakarni was First Satavahana King and not the powerful Satavahana ruler.

(ii) His achievements are not described in the Managhat inscription.

(iii) His name was inscribed on one of the gateways of Sanchi stupa and referred to as "Lord of Dakshinpatha".

(A) (iii) only

(B) (ii) and (iii) only

(C) (i) only

(D) (i) and (ii) only

(E) Answer not known

கீழே கொடுக்கப்பட்ட கூற்று/கூற்றுகளில் எது/எவை சரியானவை?

(i) சதகர்ணி சாதவாகன மன்னர்களில் முதல் அரசர் மற்றும் முதல் சக்தி வாய்ந்த சாதவாகன ஆட்சியாளர் அல்ல.

(ii) அவருடைய சாதனைகள் மனாகாட் கல்வெட்டில் குறிப்பிடப்படவில்லை.

(iii) சாஞ்சி ஸ்தூபியின் நுழைவாயில்கள் ஒன்றில் அவரது பெயர் பொறிக்கப்பட்டுள்ளது மற்றும் "தட்சிணபாதத்தின் இறைவன்" என்று குறிப்பிடப்படுகிறது.

(A) (iii) மட்டும்

(B) (ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மட்டும்

(D) (i) மற்றும் (ii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

126. Find out Incorrectly paired :

| | Commission | | Year of Establishment |
|---|---|---|---|
| (1) | NHRC | – | 1993 |
| (2) | Central Information Commission | – | 2005 |
| (3) | Central Vigilance Commission | – | 1963 |
| (4) | Central Bureau of Investigation | – | 1969 |

(A) (2) and (3) only

(B) (1) and (2) only

(C) (3) and (4) only

(D) (2) and (4) only

(E) Answer not known

தவறான இணையை கண்டுபிடி :

| | ஆணையம்/அமைப்பு | | ஏற்படுத்தப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| (1) | தேசிய மனித உரிமைகள் ஆணையம் | – | 1993 |
| (2) | மத்திய தகவல் ஆணையம் | – | 2005 |
| (3) | மத்தியக் கண்காணிப்பு ஆணையம் | – | 1963 |
| (4) | மத்தியப் புலனாய்வு அமைப்பு | – | 1969 |

(A) (2) மற்றும் (3) மட்டும்

(B) (1) மற்றும் (2) மட்டும்

(C) (3) மற்றும் (4) மட்டும்

(D) (2) மற்றும் (4) மட்டும்

(E) விடை தெரியவில்லை

127. Assertion [A] : Quality of life of people living in rural areas of Tamil Nadu has improved

Reason [R] : The Tamil Nadu state has introduced a flagship programme called Tamilnadu Village Habitations Improvement Scheme.

(A) [A] is true and [R] is false

(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]

(C) [A] is false; [R] is true

(D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A] is correct

(E) Answer not known

கூற்று [A] : தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட்டுள்ளது.

காரணம் [R] : தமிழ்நாடு அரசு தமிழ்நாடு கிராம வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் என்ற முதன்மைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

(A) [A] சரி மற்றும் [R] தவறு

(B) [A] மற்றும் [R] இரண்டுமே சரி மற்றும் [R] என்பது [A] க்கு சரியான விளக்கம்

(C) [A] தவறு; [R] சரி

(D) [A] மற்றும் [R] இரண்டுமே சரி ஆனால் [R] என்பது [A] க்கு சரியான விளக்கம் இல்லை என்பது சரி

(E) விடை தெரியவில்லை

128. Arrange the following events in chronological order.

(1) Civil disobedience movement

(2) Sepoy Mutiny

(3) Vellore Mutiny

(4) South Indian Rebellion

(A) (2), (3), (1), (4)

(B) (1), (2), (4), (3)

(C) (4), (2), (3), (1)

(D) (4), (3), (2), (1)

(E) Answer not known

பின்வரும் நிகழ்வுகளைக் கால வரிசைப்படி முறைப்படுத்துக.

(1) சட்ட மறுப்பு இயக்கம்

(2) சிப்பாய் கலகம்

(3) வேலூர் கலகம்

(4) தென்னிந்தியப் புரட்சி

(A) (2), (3), (1), (4)

(B) (1), (2), (4), (3)

(C) (4), (2), (3), (1)

(D) (4), (3), (2), (1)

(E) விடை தெரியவில்லை

129. Seats for Mathematics, Physics and Biology in a school are in the ratio 5 : 7 : 8. There is a proposal to increase these seats by 40%, 50% and 75% respectively. What will be the ratio of increased seats?

(A) 2 : 3 : 4

(B) 6 : 7 : 8

(C) 6 : 8 : 9

(D) None of the above

(E) Answer not known

ஒரு பள்ளியில் கணிதம், இயற்பியல் மற்றும் உயிரியல் ஆகிய பாடங்களுக்கான இடங்கள் 5 : 7 : 8 என்ற விகிதத்தில் அமைந்துள்ளது. இந்த இடங்களை முறையே 40%, 50% மற்றும் 75% உயர்த்துவதற்கான நெறிமுறை பெறப்பட்டுள்ளது எனில் உயர்த்தப்படும் இடங்களின் விகிதம் என்னவாக இருக்கும்?

(A) 2 : 3 : 4

(B) 6 : 7 : 8

(C) 6 : 8 : 9

(D) மேற்கண்ட எதுவுமில்லை

(E) விடை தெரியவில்லை

130. Carbon serves for the following purpose/purposes in living organisms :

(1) It's a structural component of organic molecule.

(2) Helps to bind with other molecules.

(3) Gives flexibility to the form and function of Biomolecules such as DNA and RNA.

(A) (1) alone

(B) (2) alone

(C) (3) alone

(D) (1), (2) and (3)

(E) Answer not known

உயிரினங்களில் கார்பன் கீழ்கண்ட எந்த பணி/பணிகளைச் செய்கிறது?

(1) இது கரிம மூலக்கூறுகளின் கட்டமைப்பு கூறாக செயல்படுகிறது.

(2) இது மற்ற அணுக்களுடன் எளிதில் பிணைப்புகளை ஏற்படுத்துகிறது.

(3) இது உயிர் மூலக்கூறுகள் (DNA, RNA) எடுக்கக்கூடிய வடிவம் மற்றும் செயல்பாட்டிற்கு நெகிழ்வு தன்மையை அளிக்கிறது.

(A) (1) மட்டும் சரி

(B) (2) மட்டும் சரி

(C) (3) மட்டும் சரி

(D) (1), (2) மற்றும் (3)

(E) விடை தெரியவில்லை

131. Arrange the following in chronological order :

(1) The Indian National Army Trial

(2) Formation of Indian National Army

(3) The Royal Indian Air Force

(4) C. Rajagopalachari's Formula

(A) (4), (2), (1), (3)

(B) (2), (1), (3), (4)

(C) (3), (2), (4), (1)

(D) (1), (2), (3), (4)

(E) Answer not known

சரியான காலவரிசையில் அமைத்திடுக :

(1) இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை

(2) இந்திய தேசிய இராணுவம் தோற்றுவிக்கப்படுதல்

(3) இராயல் இந்திய விமானப்படை தோற்றுவிக்கப்படுதல்

(4) சி. இராஜகோபால ஆச்சாரி திட்டம்

(A) (4), (2), (1), (3)

(B) (2), (1), (3), (4)

(C) (3), (2), (4), (1)

(D) (1), (2), (3), (4)

(E) விடை தெரியவில்லை

132. Consider the statements on the national co-operative development corporation (NCDC) and choose the correct answer

(1) It is a statutory corporation

(2) It is an autonomous organization

(3) Now it is a public financial institution

(4) Operating under the administrative control of ministry of agriculture and farmer welfare

(A) (2) and (3) only

(B) (1) and (3) only

(C) (1) and (4) only

(D) (2) and (4) only

(E) Answer not known

தேசிய கூட்டுறவு மேம்பாட்டு கழகம் (NCDC) பற்றிய கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

(1) இது ஓர் சட்டப்பூர்வ கழகம்

(2) இது ஓர் தன்னாட்சி நிறுவனமாகும்

(3) இன்று இதுவோர் பொது நிதி நிறுவனமாக இருக்கிறது

(4) இது வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிறது

(A) (2) மற்றும் (3) மட்டும்

(B) (1) மற்றும் (3) மட்டும்

(C) (1) மற்றும் (4) மட்டும்

(D) (2) மற்றும் (4) மட்டும்

(E) விடை தெரியவில்லை

133. Assertion [A] : Migration is the movement of people across regions and territories.

Reason [R] : Migration can be external or international.

(A) [A] is true but [R] is false

(B) [A] is false and [R] is true

(C) Both [A] and [R] are true

(D) Both [A] and [R] are false

(E) Answer not known

கூற்று [A] : இடப்பெயர்வு என்பது பிராந்தியங்கள் மற்றும் பிரதேசங்களுக்கு இடையே மக்கள் இடம்பெயர்தல் ஆகும்.

காரணம் [R] : இடப்பெயர்வு வெளிப்புறமாகவோ அல்லது சர்வதேசமாகவோ இருக்கலாம்.

(A) கூற்று [A] சரி ஆனால் காரணம் [R] தவறு

(B) கூற்று [A] தவறு மற்றும் காரணம் [R] சரி

(C) கூற்று [A] ம் மற்றும் காரணம் [R] ம் சரி

(D) கூற்று [A] ம் மற்றும் காரணம் [R] ம் தவறு

(E) விடை தெரியவில்லை

134. To arrange Valluvar's statement about Sageness

(1) Modesty

(2) Truth

(3) Love

(4) Obligation

(5) Complaisance

(A) (4), (3), (2), (5), (1)

(B) (5), (4), (3), (2), (1)

(C) (1), (2), (3), (4), (5)

(D) (3), (1), (4), (5), (2)

(E) Answer not known

சான்றாண்மையின் இலக்கணம் குறித்து வள்ளுவர் கூறுவனவற்றை நிரல்படுத்துக.

(1) நாணம்

(2) வாய்மை

(3) அன்பு

(4) ஒப்புரவு

(5) கண்ணோட்டம்

(A) (4), (3), (2), (5), (1)

(B) (5), (4), (3), (2), (1)

(C) (1), (2), (3), (4), (5)

(D) (3), (1), (4), (5), (2)

(E) விடை தெரியவில்லை



ϕ

135. If $\frac{a}{b}=\frac{4}{5}$ and $\frac{b}{c}=\frac{15}{16}$ then $\frac{c^2-a^2}{c^2+a^2}=$

(A) $\frac{1}{7}$

(B) $\frac{7}{25}$

(C) $\frac{3}{4}$

(D) $\frac{25}{7}$

(E) Answer not known

$\frac{a}{b}=\frac{4}{5}$ மற்றும் $\frac{b}{c}=\frac{15}{16}$ எனில் $\frac{c^2-a^2}{c^2+a^2}=$

(A) $\frac{1}{7}$

(B) $\frac{7}{25}$

(C) $\frac{3}{4}$

(D) $\frac{25}{7}$

(E) விடை தெரியவில்லை

136. The number 311 311 311 311 311 311 311 is ________.

(A) neither divisible by 3 nor by 11

(B) divisible by 11 but not by 3

(C) divisible by 3 but not by 11

(D) divisible by both 3 and 11

(E) Answer not known

311 311 311 311 311 311 311 என்ற எண் ஆனது ________.

(A) 3 ஆலும் மீதியின்றி வகுபடாது, 11-றாலும் மீதியின்றி வகுபடாது

(B) 11 ஆல் மீதியின்றி வகுபடும் ஆனால் 3 ஆல் மீதியின்றி வகுபடாது

(C) 3 ஆல் மீதியின்றி வகுபடும் ஆனால் 11-ஆல் மீதியின்றி வகுபடாது

(D) 3 மற்றும் 11 ஆல் மீதியின்றி வகுபடும்

(E) விடை தெரியவில்லை

137. Choose the right statement(s) about Malwa Plateau :

(1) It has an average altitude of 600 m and slopes towards the east.

(2) The plateau region is mostly drained by chambal and its tributary rivers.

(3) The Malwa plateau is located in Rajastan, Gujarat and Madhya Pradesh.

(A) (1) is correct

(B) (1) and (3) are correct

(C) (2) and (3) are correct

(D) (1) and (2) are correct

(E) Answer not known

மால்வா பீடபூமி பற்றிய சரியான கூற்றினை/கூற்றுகளைத் தேர்வு செய்க :

(1) சராசரியாக 600 மீட்டர் உயரத்துடன் கிழக்கு நோக்கி சரிந்துள்ளது.

(2) பீடபூமியின் பெரும்பாலான பகுதிகளில் சம்பல் மற்றும் அதன் துணை ஆறுகள் பாய்கின்றது.

(3) மால்வா பீடபூமி ராஜஸ்தான், குஜராத் மற்றும் மத்திய பிரதேசத்தில் அமைந்துள்ளது.

(A) (1) மட்டும் சரியானது

(B) (1) மற்றும் (3) சரியானவை

(C) (2) மற்றும் (3) சரியானவை

(D) (1) மற்றும் (2) சரியானவை

(E) விடை தெரியவில்லை

138. Match List I with List II and select the correct answer by using the codes given below the list :

| List I Articles | | List II Councils | |
|---|---|---|---|
| (a) | Art 280 | 1. | Inter-State Council |
| (b) | Art 263 | 2. | Inter-State Water Dispute Tribunal |
| (c) | Art 262 | 3. | Goods and Services Tax Council |
| (d) | Art 279 A | 4. | Finance Commission |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

(E) Answer not known

கீழேகொடுக்கப்பட்டுள்ள பட்டியல் I மற்றும் II -இல் உள்ளவற்றை சரியாகப் பொருத்துக :

| பட்டியல் I சரத்துகள் | | பட்டியல் II குழுக்கள் | |
|---|---|---|---|
| (a) | சட்டப்பிரிவு 280 | 1. | மாநிலங்களுக்கிடையிலான குழு |
| (b) | சட்டப்பிரிவு 263 | 2. | மாநிலங்களுக்கிடையிலான நதிநீர் தகராறு தீர்ப்பாயம் |
| (c) | சட்டப்பிரிவு 262 | 3. | பொருட்கள் மற்றும் சேவை வரிக் குழு |
| (d) | சட்டப்பிரிவு 279 A | 4. | நிதிக்குழு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

(E) விடை தெரியவில்லை

139. The objectives of National Agricultural Market (e-NAM) portal is to

(i) Create a unified national virtual market for agricultural commodities.

(ii) Aid farmers in getting better prices.

(iii) Provide marketing options to the farmers.

(A) (i) and (ii) only

(B) (ii) and (iii) only

(C) (i) and (iii) only

(D) (i), (ii) and (iii)

(E) Answer not known

தேசிய விவசாயச் சந்தை (e-NAM) இணைய முகப்பின் நோக்கம்.

(i) விவசாயப் பொருட்களுக்கு, ஒரு ஒருங்கிணைந்த தேசிய மெய்நிகர் சந்தையை உருவாக்குவது

(ii) சிறந்த விலையைப் பெறுவதற்கு விவசாயிகளுக்கு உதவுதல்

(iii) விவசாயிகளுக்கு சந்தைப்படுத்தல் வழிகளை வழங்குதல்

(A) (i) மற்றும் (ii) மட்டும்

(B) (ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (iii) மட்டும்

(D) (i), (ii) மற்றும் (iii)

(E) விடை தெரியவில்லை

140. Which of the following is incorrectly paired?

(i) Gopala Nayak – Dindugal

(ii) Dhoondaji Wagh – Madurai

(iii) Marudhupandyas – Ettayapuram

(iv) Pulithevan – Nerkattanseval

(A) (i) and (ii) only

(B) (ii) and (iii) only

(C) (iii) and (iv) only

(D) (iv) only

(E) Answer not known

பின்வருவனவற்றுள் எது தவறாக இணைக்கப்பட்டுள்ளது?

(i) கோபால நாயக் – திண்டுக்கல்

(ii) தூண்டாஜி வாக் – மதுரை

(iii) மருதுபாண்டியர்கள் – எட்டயபுரம்

(iv) புலித்தேவன் – நெற்கட்டாஞ்செவல்

(A) (i) மற்றும் (ii) மட்டும்

(B) (ii) மற்றும் (iii) மட்டும்

(C) (iii) மற்றும் (iv) மட்டும்

(D) (iv) மட்டும்

(E) விடை தெரியவில்லை

141. The diameter of a sphere is 8 cm. It is melted and drawn into a wire of diameter 3 mm. The length of the wire is ______.

(A) 36.9 m
(B) 37.9 m
(C) 38.9 m
(D) 39.9 m
(E) Answer not known

8 செ.மீ விட்டமுள்ள கோளமானது உருக்கப்பட்டு 3 மி.மீ விட்டமுள்ள கம்பியாக உருவாக்கப்பட்டால், அக்கம்பியின் நீளம் ______.

(A) 36.9 மீ
(B) 37.9 மீ
(C) 38.9 மீ
(D) 39.9 மீ
(E) விடை தெரியவில்லை

142. A sum of money becomes Rs. 13,380 after 3 years and Rs. 20,070 after 6 years on compound interest. Find the sum

(A) Rs. 4,014
(B) Rs. 8,460
(C) Rs. 9,210
(D) Rs. 8,920
(E) Answer not known

ஒரு குறிப்பிட்ட தொகையானது கூட்டு வட்டி முறையில் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ரூ. 13,380 ஆகவும், ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு ரூ. 20,070 ஆகவும் வளர்ச்சி அடைகிறது எனில் அந்தத் தொகை எவ்வளவு?

(A) ரூ. 4,014
(B) ரூ. 8,460
(C) ரூ. 9,210
(D) ரூ. 8,920
(E) விடை தெரியவில்லை

143. If → stands for 'addition',

← stands for 'subtraction',

↑ stands for 'division',

↓ stands for 'multiplication',

↗ stands for 'equal to' then which of the following alternatives is correct?

(A) 7 ← 43 ↑ 6 ↓ 1 ↗ 4

(B) 3 ↓ 6 ↑ 2 → 3 ← 6 ↗ 5

(C) 5 → 7 ← 3 ↑ 2 ↗ 4

(D) 2 ↓ 5 ← 6 → 2 ↗ 6

(E) Answer not known

→ என்பது கூட்டலையும்,

← என்பது கழித்தலையும்,

↑ என்பது வகுத்தலையும்,

↓ என்பது பெருக்கலையும்,

↗ என்பது சமம் என்பதையும் குறித்தால் கீழ்க்கண்டவற்றில் எது சரியானதாகும்?

(A) 7 ← 43 ↑ 6 ↓ 1 ↗ 4

(B) 3 ↓ 6 ↑ 2 → 3 ← 6 ↗ 5

(C) 5 → 7 ← 3 ↑ 2 ↗ 4

(D) 2 ↓ 5 ← 6 → 2 ↗ 6

(E) விடை தெரியவில்லை

144. Match the following :

(a) Bharathiar — 1. Pandian Parisu

(b) Kavimani Desiga Vinayagam Pillai — 2. Tamilan Ithayam

(c) Bharathidasan — 3. Kannan Pattu

(d) Ramalingam Pillai — 4. Asia Jothi

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) Answer not known

பொருத்துக :

(a) பாரதியார் — 1. பாண்டியன் பரிசு

(b) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை — 2. தமிழன் இதயம்

(c) பாரதிதாசன் — 3. கண்ணன் பாட்டு

(d) இராமலிங்கம் பிள்ளை — 4. ஆசிய ஜோதி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

145. "No man shall be taken or imprisoned, disseized or outlawed, or exiled, or in any way destroyed save... by the law of the land".

This famous clause is in...

(A) Bill of Rights

(B) Universal Declaration of Human Rights

(C) Magna Carta

(D) The Protection of Human Rights Act 1993

(E) Answer not known

"நாட்டின் அடிப்படைச் சட்டத்தின்படியே அன்றி எந்த ஒரு மனிதனும் கைது செய்யப்படவோ, சிறைப்படுத்தப்படவோ, நாடுகடத்தப்படுவதோ, அவரின் சொத்துக்களைக் கைப்பற்றவோ" வேறு எந்த வகையிலோ அழிக்கப்பட முடியாது.

இந்த புகழ்பெற்ற வாசகம் அமைந்துள்ள ஆவணம்...

(A) உரிமைகள் சட்டம்

(B) உலகளாவிய மனித உரிமைப் பிரகடனம்

(C) மகாசாசனம்

(D) மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993

(E) விடை தெரியவில்லை

146. The major renewable energy source in Tamil Nadu

(A) Windmill

(B) Coal

(C) Oil and Gas

(D) Nuclear power

(E) Answer not known

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரம்

(A) காற்றாலை

(B) நிலக்கரி

(C) எண்ணெய் மற்றும் எரிவாயு

(D) அணுசக்தி

(E) விடை தெரியவில்லை

147. Find out the correct statement :

(1) Thirukkural was translated in Hindi – Appathetsithar

(2) Thirukkural was translated in German – Arial

(3) Thirukkural starts with alphabet 'அ' (Aa) and end with 'ன' (Na)

(4) Friendship has 13 chapters

(A) (1) only

(B) (1), (3) only

(C) (1), (4) only

(D) (2), (4) only

(E) Answer not known

சரியான கூற்றினைக் கண்டறிக.

(1) திருக்குறளை இந்தியில் மொழிபெயர்த்தவர் - அப்பாதீட்சிதர்

(2) திருக்குறளை ஜெர்மனில் மொழிபெயர்த்தவர் - ஏரியல்

(3) திருக்குறள் 'அ'கரத்தில் தொடங்கி 'ன'கரத்தில் முடிகிறது

(4) நட்பியல் 13 அதிகாரங்களைக் கொண்டுள்ளது

(A) (1) மட்டும்

(B) (1), (3) மட்டும்

(C) (1), (4) மட்டும்

(D) (2), (4) மட்டும்

(E) விடை தெரியவில்லை

148. If $A \to 1$, $B \to 2$, $C \to 3 ....$ $Z \to 26$

$A^B + B^C + C^A$ will not be equal to ________.

(A) $\sqrt{FX}$

(B) $S - G$

(C) (B) (E)

(D) L

(E) Answer not known

$A \to 1$, $B \to 2$, $C \to 3$ ... $Z \to 26$ எனக் கொண்டால்

$A^B + B^C + C^A$ என்பது ________க்கு சமமாக இருக்காது.

(A) $\sqrt{FX}$

(B) $S - G$

(C) (B) (E)

(D) L

(E) விடை தெரியவில்லை

149. Which of the following statements are true about the Nordics?

(i) Indo-Aryans are the last immigirants into India.

(ii) This group was the next to come to India after the Negritos.

(iii) This group have come into India between 2000 and 1500 BC.

(A) (i) only

(B) (i) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

நார்டிக்ஸ் குறித்த பின்வரும் கூற்றுகளில் உண்மையான கூற்று எது?

(i) இந்தோ ஆரியர்கள் இந்தியாவில் கடைசியாக குடியேறியவர்கள்.

(ii) நெக்ரிட்டோகளுக்கு பிறகு இந்தியாவுக்கு வந்த குழு இந்தக் குழு.

(iii) இந்தக் குழு 2000 மற்றும் 1500 BC க்கு இடையில் இந்தியாவிற்கு வந்தனர்.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

150. Which of the following are true about Tamil Nadu Panchayats Act, 1994?

(i) Chapter II of this Act deals with Gram Sabha.

(ii) Chapter VII deals with Taxation and Finance.

(iii) Chapter XII deals with Penalties.

(A) (i) only

(B) (i) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

கீழ்க்கண்ட தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டம், 1994 தொடர்பானவற்றுள் சரியானது எவை?

(i) இச்சட்டத்தின் இரண்டாம் அத்தியாயம் கிராம சபை தொடர்பானது ஆகும்.

(ii) இதன் ஏழாம் அத்தியாயம் வரி விதிப்பு மற்றும் நிதி தொடர்பானது ஆகும்.

(iii) இதன் பன்னிரண்டாவது அத்தியாயம் அபராதங்கள் தொடர்பானது ஆகும்.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

151. Choose the right matches :

| | | | |
|---|---|---|---|
| (1) | NHS | – | National Health Service |
| (2) | CBHI | – | Central Bureau of Health Insurance |
| (3) | PHC | – | Primary Health Center |
| (4) | NRHM | – | National Real Health Mission |

(A) (1) and (3) are correct

(B) (1) and (2) are correct

(C) (2) and (3) are correct

(D) (3) and (4) are correct

(E) Answer not known

சரியான பொருத்தங்களைத் தேர்வு செய்யவும் :

| | | | |
|---|---|---|---|
| (1) | NHS | – | தேசிய சுகாதார சேவை |
| (2) | CBHI | – | சுகாதாரக் காப்பீட்டுக்கான மத்தியப் பணியகம் |
| (3) | PHC | – | ஆரம்ப சுகாதார நிலையம் |
| (4) | NRHM | – | தேசிய சுகாதார சேவை மையம் |

(A) (1) மற்றும் (3) சரியானவை

(B) (1) மற்றும் (2) சரியானவை

(C) (2) மற்றும் (3) சரியானவை

(D) (3) மற்றும் (4) சரியானவை

(E) விடை தெரியவில்லை

152. Which of the following statement(s) is/are true about Khilji building?

(i) K.S. Lal observes that with the enthronement of Alauddin Khilji, a new era was ushered in architecture in the Hindu Muslim style

(ii) Marshall writes "Hauz-i-khas is one of the most treasured gems of Islamic architecture."

(iii) "Percy Brown remarks" the entrance gateway of the mosque of Alauddin Khilji occupies a key position in the evolution of Islamic architecture in India.

(A) (i) only

(B) (i) and (ii) only

(C) (i) and (iii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

கில்ஜிகளின் கட்டிடம் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது/எவை உண்மை?

(i) அலாவுதின் கில்ஜி அரியணை ஏறியபின் இந்து-முஸ்லிம் பாணி கட்டிடக் கலையில் ஒரு புதிய சகாப்தம் தொடங்கப்பட்டதாக கே.எஸ். லால் கூறுகிறார்.

(ii) ஹவுஸ்-இ-காஸ் இஸ்லாமிய கட்டிடக் கலையின் மிகவும் பொக்கிஷமான ரத்தினங்களில் ஒன்று என்று மார்ஷல் குறிப்பிடுகிறார்.

(iii) "அலாவுதின் கில்ஜியின் மசூதியின் நுழைவு வாயில் இந்தியாவில் இஸ்லாமிய கட்டிடக் கலையின் பரிணாம வளர்ச்சியில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது என்று பெர்சி பிரவுன் கூறுகிறார்".

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (ii) மட்டும்

(C) (i) மற்றும் (iii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

153. Who was the female poet who gave focused on heroism in the Tamil Society of Sangam Era as 'Thondruvan Matho Porkalathane'?

(A) Okkur Masathiar
(B) Kaval Pendu
(C) Velliveethiar
(D) Avvaiyar
(E) Answer not known

சங்ககால தமிழ்ச் சமூகத்தில் 'தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே'- என வீரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து பாடிய பெண்பால் புலவர் யார்?

(A) ஒக்கூர் மாசாத்தியார்
(B) காவல் பெண்டு
(C) வெள்ளிவீதியார்
(D) ஔவையார்
(E) விடை தெரியவில்லை

154. 3 men or 4 women or 12 boys can complete a work in one day. In how many days a man, a woman and 5 boys together can complete that work?

(A) 1 day
(B) 2 days
(C) 3 days
(D) 4 days
(E) Answer not known

3 ஆண்கள் அல்லது 4 பெண்கள் அல்லது 12 சிறுவர்கள் ஒரு வேலையை ஒரு நாளில் முடிப்பார்கள் எனில் 1 ஆண், 1 பெண் மற்றும் 5 சிறுவர்கள் இணைந்து அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்கள்?

(A) 1 நாள்
(B) 2 நாட்கள்
(C) 3 நாட்கள்
(D) 4 நாட்கள்
(E) விடை தெரியவில்லை

155. If DANGER is coded as 10-7-20-13-11-24, then the code of 'MACHINE' in the same code is

(A) 13-7-20-9-11-25-15

(B) 13-7-20-10-11-25-15

(C) 19-7-9-15-14-11-20

(D) 19-7-9-14-15-20-11

(E) Answer not known

DANGER என்பது 10-7-20-13-11-24 என குறியிடப்பட்டிருந்தால், அதே குறியீட்டில் MACHINE என்னும் சொல்லின் குறியீடு

(A) 13-7-20-9-11-25-15

(B) 13-7-20-10-11-25-15

(C) 19-7-9-15-14-11-20

(D) 19-7-9-14-15-20-11

(E) விடை தெரியவில்லை

156. Choose the right matches among type :

| | | | |
|---|---|---|---|
| (1) | Permanent Settlement | – | Lord Curzon |
| (2) | Partition of Bengal | – | Cornwallis |
| (3) | Ryotwari System | – | Munro |
| (4) | Network of Railways | – | Dalhousie |

(A) (1) and (3) are correct

(B) (1) and (2) are correct

(C) (2) and (3) are correct

(D) (3) and (4) are correct

(E) Answer not known

சரியாகப் பொருந்தியுள்ளதைத் தேர்ந்திடுக :

| | | | |
|---|---|---|---|
| (1) | நிரந்தர நிலவரித் திட்டம் | – | கர்சன் பிரபு |
| (2) | வங்கப் பிரிவினை | – | காரன்வாலிஸ் |
| (3) | இரயத்துவாரி முறை | – | மன்றோ |
| (4) | இருப்புப்பாதை இணைப்பு | – | டல்ஹௌசி |

(A) (1) மற்றும் (3) சரி

(B) (1) மற்றும் (2) சரி

(C) (2) மற்றும் (3) சரி

(D) (3) மற்றும் (4) சரி

(E) விடை தெரியவில்லை

157. Read the following passage and answer the items that follow. Your answer to this item should be based on the passage only.

A nation or society without the participation of women cannot achieve development. If we eliminate gender discrimination women will deliver all the potentials. Knowledge to develop the family the nation and the world. As former UN Secretary General Kofi Annan has stated – Gender equality is more than a goal in itself. It is pre condition for meeting the challenges of reducing poverty, promoting sustainable development and building good governance.

(A) Steps to be taken to ensure Women Education

(B) Importance has to be given to reduce gender discrimination

(C) Strong measures have to be taken to stop Sexual Harassment of Women

(D) Need for the employment Generation Programmes for Women

(E) Answer not known

கீழ்க்கண்ட பத்தியினை வாசித்து, பின்வருவனவற்றிற்கு விடையளிக்கவும். உங்கள் விடை இப்பகுதியை அடிப்படையாகக் கொண்டே அமைய வேண்டும்.

பெண்களின் பங்களிப்பு இல்லாமல் ஒரு நாடோ அல்லது ஒரு சமூகமோ முன்னேற்றம் அடைய முடியாது. பாலின வேறுபாட்டினை நாம் களைந்தால் குடும்பம், நாடு மற்றும் இந்த உலகம் வளர்ச்சி அடைவதற்கான திறமை மற்றும் அறிவினை பெண்கள் வெளிப்படுத்துவர். ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொது செயலாளர் கோஃபி அன்னான் அவர்கள் பாலின சமத்துவம் என்பது குறிக்கோளை விடவும் மேலானது எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் வறுமையைக் குறைக்க, நீடித்த சீரான வளர்ச்சி மற்றும் சிறந்த ஆளுமைக் கட்டமைப்பிற்கு இது முன் நிபந்தனை என கூறியுள்ளார்.

(A) பெண் கல்வியை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

(B) பாலின வேறுபாட்டினைக் குறைப்பதற்கான முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்

(C) பெண்களின் பாலியல் துன்புறுத்தல்களைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்

(D) பெண்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்களுக்கான தேவை

(E) விடை தெரியவில்லை

158. Which of the following is incorrectly paired in rural-urban migration?

| | | | |
|---|---|---|---|
| (1) | Rural to rural migration | – | Reverse push back |
| (2) | Rural to urban migration | – | Push - Pull activity |
| (3) | Urban to urban migration | – | Urban turnover |
| (4) | Urban to rural migration | – | Rural turnover |

(A) (1) and (4)

(B) (1) and (2)

(C) (2) and (3)

(D) (3) and (4)

(E) Answer not known

பின்வருவனவற்றுள் கிராமத்திலிருந்து நகரத்திற்கு இடம் பெயர்வு குறித்த தவறான பொருத்தத்தைக் கண்டறிக.

| | | | |
|---|---|---|---|
| (1) | கிராமத்திலிருந்து கிராமத்திற்கு இடம் பெயர்வு | – | தலைகீழ் எதிர் நகர்வு |
| (2) | கிராமத்திலிருந்து நகரத்திற்கு இடம் பெயர்வு | – | நெருக்குதல் வெளியேறுதல் செயல்பாடு |
| (3) | நகரத்திலிருந்து நகரத்திற்கு இடம் பெயர்வு | – | நகர்புற மறுசுழற்சி |
| (4) | நகரத்திலிருந்து கிராமத்திற்கு இடம்பெயர்வு | – | கிராமப்புற மறுசுழற்சி |

(A) (1) மற்றும் (4)

(B) (1) மற்றும் (2)

(C) (2) மற்றும் (3)

(D) (3) மற்றும் (4)

(E) விடை தெரியவில்லை

159. Thirukkural is a compilation of the sublime, pure human thoughts according to M. Ariel – Based on this saying who has referred the Thirukkural as the Tamil's sacred book

(A) Mahatma Gandhi

(B) Arignar Anna

(C) M. Varatharajan

(D) G.U. Pope

(E) Answer not known

'உன்னதமான, தூய்மையான மனிதச் சிந்தனையின் தொகுதியே திருக்குறள்' - என்னும் எம். ஏரியலின் கருத்தை அடியொற்றி திருக்குறளை 'தமிழர் வேதம்' எனக் குறிப்பிட்டவர்

(A) மகாத்மா காந்தியடிகள்

(B) அறிஞர் அண்ணா

(C) மு. வரதராசன்

(D) ஜி.யு. போப்

(E) விடை தெரியவில்லை

160. A man spends Rs. 500 in buying 12 tables and chairs. The cost of one table is Rs. 50 and that of one chair is Rs. 40. What is the ratio of the numbers of the chairs and tables purchased?

(A) 5 : 1

(B) 2 : 10

(C) 10 : 5

(D) 9 : 3

(E) Answer not known

ஒரு மனிதர் ரூ. 500 க்கு, 12 மேசைகள் மற்றும் நாற்காலிகள் வாங்குகிறார். ஒரு மேசையின் விலை ரூ. 50ம், ஒரு நாற்காலியின் விலை ரூ. 40 க்கும் வாங்குகிறார் எனில் அவர் வாங்கிய நாற்காலி மற்றும் மேசையின் விலையின் விகிதத்தைக் காண்க.

(A) 5 : 1

(B) 2 : 10

(C) 10 : 5

(D) 9 : 3

(E) விடை தெரியவில்லை

161. If LCM of '$a$' and "$a+2$" is 1300. Find the LCM of "$a$" and $a+1$.

(A) 1350

(B) 2600

(C) 2550

(D) 2700

(E) Answer not known

$a$ மற்றும் $a+2$ இவற்றின் மீ.பொ.மடங்கு 1300 எனில் $a$ மற்றும் $a+1$ இவற்றின் மீ.பொ.மடங்கு காண்க.

(A) 1350

(B) 2600

(C) 2550

(D) 2700

(E) விடை தெரியவில்லை

162. Which of the following statements are correct in the context of carbon monoxide emissions?

(1) Its mainly due to incomplete combustion of fuel.

(2) They are more evident in petrol engine.

(3) Long term exposure can cause nausea.

(A) (1) and (2) only

(B) (2) and (3) only

(C) (1), (2) and (3)

(D) (1) and (3)

(E) Answer not known

கார்பன் மோனாக்ஸைடு உமிழ்வுகளைப் பற்றி கீழ்க்காணும் எந்தக் கூற்றுகள் சரி?

(1) சரிவர எரிக்காத எரிபொருளால் வரக்கூடியது.

(2) பெட்ரோல் எரிபொருள் வாகனங்களால் வருவது.

(3) நீண்ட நேர உமிழ்வினால் குமட்டல் ஏற்படுத்தும்.

(A) (1) மற்றும் (2) மட்டும்

(B) (2) மற்றும் (3) மட்டும்

(C) (1), (2) மற்றும் (3)

(D) (1) மற்றும் (3)

(E) விடை தெரியவில்லை

163. Identify the statement that is not correct with regard to President of India.

(A) President can resign from his office at any time

(B) President cannot hold office beyond his term of five years

(C) President can be removed from his office by an impeachment process

(D) No President of India has so far been impeached

(E) Answer not known

இந்தியக் குடியரசுத் தலைவர் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் தவறான கூற்றை அடையாளம் காண்க.

(A) குடியரசுத் தலைவர் பதவியில் இருக்கும் போது எப்பொழுது வேண்டுமென்றாலும் அவர் பதவி விலகலாம்

(B) ஐந்தாண்டுகள் கடந்த பிறகும், குடியரசுத் தலைவர் பதவியில் நீடிக்க இயலாது

(C) குற்றச்சாட்டு (Impeachment) வாயிலாகக் குடியரசுத் தலைவரைப் பதவி நீக்கம் செய்யலாம்

(D) இது வரை எந்த ஒரு குடியரசுத் தலைவரும் பதவி நீக்கம் செய்யப்படவில்லை

(E) விடை தெரியவில்லை

164. The Tamil Nadu Government implemented Kalaingar Magalir Urimai Thogai Scheme for the Welfare of Women. Which of the following is/are the rationale for the scheme

(i) Gender disparity in annual income according to the Global Gender Gap Report 2023

(ii) Changing the poor social status of women

(iii) Upliftment of rural women

(iv) Recognize the countless hours of silent work put in by women

(A) (i) and (iii) only

(B) (ii) and (iv) only

(C) (i) and (ii) only

(D) (i) and (iv) only

(E) Answer not known

பெண்களின் நலனுக்காக தமிழக அரசு கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை செயல்படுத்தியது. பின்வருவனவற்றில் எந்த காரணம் இந்தத் திட்டத்திற்கான நியாயமான விளக்கம்.

(i) உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கை 2023 இன் படி ஆண்டு வருமானத்தில் பாலின வேறுபாடு

(ii) பெண்களின் ஏழ்மையான சமூக நிலையை மாற்ற

(iii) கிராமப்புறப் பெண்களின் மேம்பாடு

(iv) பெண்களின் எண்ணற்ற மணிநேர அமைதியான உழைப்பை அங்கீகரித்தல்

(A) (i) மற்றும் (iii) மட்டும்

(B) (ii) மற்றும் (iv) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (i) மற்றும் (iv) மட்டும்

(E) விடை தெரியவில்லை

165. Match the following :

(a) Symbol of wooing — 1. Kuruntogai

(b) Symbol of love — 2. Leaf of the Asoka tree

(c) Crow a good harbinger — 3. Natrinai

(d) Pandil game mentioned in — 4. White Lilly

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

(E) Answer not known

பொருத்துக :

(a) ஆதரவு தேடுதலின் சின்னம் — 1. குறுந்தொகை

(b) அன்பின் சின்னம் — 2. அசோக மரத்தின் இலை

(c) காகம் ஒரு நல்ல முன்னறிவிப்பான் — 3. நற்றிணை

(d) பண்டில் விளையாட்டு குறிப்பிடப்பட்டுள்ளது — 4. வெள்ளை அல்லி மலர்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

(E) விடை தெரியவில்லை

166. Match the following :

(a) Thalai sanga pulavanar thammul — 1. Kambar

(b) Akan podhiyil Thirumunivan Tamil sangam — 2. Chekilar

(c) Koodalinaintha ondeen Tamil — 3. Thirugana Sambandar

(d) Madurai Thokaiyakkinan — 4. Manikkavasakar

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) Answer not known

பொருத்துக :

(a) தலைச் சங்கப் புலவனார் தம்முள் — 1. கம்பர்

(b) அகன் பொதியில் திருமுனிவன் தமிழ்ச் சங்கம் — 2. சேக்கிழார்

(c) கூடலினாய்ந்த ஒண்டீந் தமிழ் — 3. திருஞானசம்பந்தர்

(d) மதுரைத் தொகையாக்கினான் — 4. மாணிக்கவாசகர்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

167. There are 9 color boxes Red, Black, White, Green, Yellow, Blue, Orange, Violet, Pink but not necessarily in same order. Only 5 boxes placed between Red and White. Yellow is placed immediate above White. Only three boxes are placed between Yellow and Green. As many boxes placed between Red and Green as between Black and Yellow. Blue is placed below black but not at bottom. More than 4 boxes are placed between Yellow and Blue one box is placed between blue and orange. Pink box is placed above Violet. Which box is placed immediate above and immediate below Black?

(A) Pink and Green

(B) Pink and Violet

(C) Green and Blue

(D) Pink and Orange

(E) Answer not known

ஒன்பது வண்ண பெட்டிகள் சிவப்பு, கருப்பு, வெள்ளை, பச்சை, மஞ்சள், நீலம், ஆரஞ்ச், ஊதா, இளஞ்சிவப்பு இருக்கின்றன. ஆனால் அதே வரிசையில் இருக்க வேண்டிய அவசியமில்லை. ஐந்து பெட்டிகள் சிவப்பு மற்றும் வெள்ளை பெட்டிகளுக்கு இடையில் வைக்கப்பட்டுள்ளன. மஞ்சள் பெட்டியை வெள்ளை பெட்டிக்கு உடன் மேலே வைக்கப்பட்டுள்ளது. மூன்று பெட்டிகள் மட்டுமே மஞ்சள் மற்றும் பச்சை பெட்டிகளுக்கு இடையே உள்ளது. சிவப்பு மற்றும் பச்சை பெட்டிகளுக்கு இடையே உள்ள பெட்டிகளின் எண்ணிக்கையிலேயே கருப்பு மற்றும் மஞ்சள் பெட்டிகளுக்கு இடையில் உள்ளது. நீலப்பெட்டி, கருப்பு பெட்டிக்கு கீழே வைக்கப்பட்டுள்ளது, ஆனால் அது அடியில் வைக்கப்படவில்லை. நான்கு பெட்டிகளுக்கு மேல் மஞ்சள் மற்றும் நீலப் பெட்டிகளுக்கு இடையில் வைக்கப்பட்டுள்ளது. ஒரு பெட்டி நீலப்பெட்டிக்கும் ஆரஞ்சு பெட்டிக்கும் இடையில் வைக்கப்பட்டுள்ளது. இளஞ்சிவப்பு பெட்டி ஊதா பெட்டிக்கு மேல் வைக்கப்பட்டுள்ளது. எந்த பெட்டி கருப்பு பெட்டிக்கு மேலும், கீழும் இருக்கும்?

(A) இளஞ்சிவப்பு மற்றும் பச்சை

(B) இளஞ்சிவப்பு மற்றும் ஊதா

(C) பச்சை மற்றும் நீலம்

(D) இளஞ்சிவப்பு மற்றும் ஆரஞ்சு

(E) விடை தெரியவில்லை

168. Which of the following statement(s) about the Din-i-Ilahi is/are correct?

(A) The number of the followers of the Din-i-Ilahi was large

(B) It is a state religion

(C) To establish a national religion which would be acceptable to the Muslims and the Hindus

(D) To expand its territories and gain control over the independent states

(E) Answer not known

கீழ்காண்பனவற்றுள் தீன்-இலாஹி பற்றிய உண்மையான கூற்று/கூற்றுகள் எவை?

(A) தீன்- இலாஹியை பின்பற்றியவர்கள் அதிகம்

(B) இது ஒரு அரசு மதம்

(C) முஸ்லீம்கள் மற்றும் இந்துக்கள் ஏற்றுக்கொள்ள கூடிய தேசிய மதமாக நிறுவ வேண்டும்

(D) பிரதேசங்களை விரிவுபடுத்துவதற்கும் சுதந்திர நாடுகளின் மீது கட்டுப்பாட்டைப் பெறுவதற்கும்

(E) விடை தெரியவில்லை

169. _______ plate exposed that the Chola Queen Vanamadevi Committed Sati.

(A) Anbil Plate

(B) Tiruvalangadu Plate

(C) Bahur Plate

(D) Velvikudi Plate

(E) Answer not known

சோழ அரசி வாணமாதேவி சதி மேற்கொண்டார் என்பதை வெளிப்படுத்தும் பட்டயம் _______.

(A) அன்பில் பட்டயம்

(B) திருவாலங்காடு பட்டயம்

(C) பாகூர் பட்டயம்

(D) வேள்விக்குடி பட்டயம்

(E) விடை தெரியவில்லை

170. Find out which of the following pairs is not correctly matched?

(A) S.R. Bommai Case (1994) – President's Rule

(B) Unni Krishnan Case (1993) – Right to Education

(C) Prakash Singh Case (2006) – Judicial Reforms

(D) M. Nagaraj Case (2006) – Reservation

(E) Answer not known

கீழ்க்காண்பவற்றுள் பொருத்தமற்றது எது?

(A) S.R. பொம்மை வழக்கு (1994) – குடியரசுத் தலைவர் ஆட்சி

(B) உன்னிகிருஷ்ணன் வழக்கு (1993) – கல்வியுரிமை

(C) பிரகாஷ்சிங் வழக்கு (2006) – நீதித்துறைச் சீர்திருத்தம்

(D) M. நாகராஜ் வழக்கு (2006) – இட ஒதுக்கீடு

(E) விடை தெரியவில்லை

171. Tax Incentives for startup companies for a period of three years have been introduced in the

(A) Finance Act, 2016

(B) September 25, 2014

(C) November 4, 2011

(D) Finance Act, 2014

(E) Answer not known

புதிதாகத் தொடங்கப்படும் நிறுவனங்களுக்கு வரிச்சலுகை மூன்று வருடங்களுக்கு வழங்குவது என்று தொடங்கப்பட்டது நிதி சட்டம்?

(A) நிதிச் சட்டம், 2016

(B) செப்டம்பர் 25, 2014

(C) நவம்பர் 4, 2011

(D) நிதிச் சட்டம், 2014

(E) விடை தெரியவில்லை

172. Identify the party which started Anti-Non Cooperation League in Madras Presidency.

(A) Swatantra Party

(B) Justice Party

(C) Communist Party

(D) Indian National Congress

(E) Answer not known

மதராஸ் மாகாணத்தில் ஒத்துழையாமை இயக்க எதிர்ப்பு சங்கத்தை தொடங்கிய கட்சியை அடையாளம் காண்க.

(A) சுதந்திரா கட்சி

(B) நீதிக்கட்சி

(C) கம்யூனிஸ்ட் கட்சி

(D) இந்திய தேசிய காங்கிரஸ்

(E) விடை தெரியவில்லை

173. A borrows Rs. 16,000 at 12% p.a. simple interest and B borrows Rs. 12,000 at 18% p.a. simple interest. In how many years will their amounts debt be equal?

(A) $12\frac{2}{3}$ years

(B) $14\frac{2}{3}$ years

(C) $16\frac{2}{3}$ years

(D) $18\frac{2}{3}$ years

(E) Answer not known

தனி வட்டியில், A என்பவர் ரூ. 16,000 தொகையை 12% ஆண்டு வட்டிக்கு கடன் வாங்குகிறார். தனி வட்டியில், B என்பவர் ரூ. 12,000 தொகையை 18% ஆண்டு வட்டிக்கு கடன் வாங்குகிறார். எத்தனை ஆண்டுகளில் இவர்களின் கடன் தொகை சமமாக இருக்கும்?

(A) $12\frac{2}{3}$ ஆண்டுகள்

(B) $14\frac{2}{3}$ ஆண்டுகள்

(C) $16\frac{2}{3}$ ஆண்டுகள்

(D) $18\frac{2}{3}$ ஆண்டுகள்

(E) விடை தெரியவில்லை

174. Match the following and choose the correct option :

(a) Chloroform — 1. $CCl_3 NO_2$

(b) Phosgene — 2. $ClC_2H_4–S–C_2H_4Cl$

(c) Tear gas — 3. $CHCl_3$

(d) Mustard gas — 4. $COCl_2$

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 1 | 4 | 3 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) Answer not known

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை சரியாகப் பொருத்தி குறியீடுகள் மூலம் சரியான விடையினைத் தேர்வு செய்க :

(a) குளோரோபார்ம் — 1. $CCl_3 NO_2$

(b) பாஸ்ஜீன் — 2. $ClC_2H_4–S–C_2H_4Cl$

(c) கண்ணீர்ப் புகை — 3. $CHCl_3$

(d) கடுகு வாயு — 4. $COCl_2$

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 1 | 4 | 3 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

175. Incorporation of Fundamental Duties to the Constitution of India was done by ________

(A) 42nd Constitutional Amendment Act 1976

(B) 43rd Constitutional Amendment Act 1977

(C) 44th Constitutional Amendment Act 1978

(D) 45th Constitutional Amendment Act 1980

(E) Answer not known

இந்த சட்டத்திருத்தத்தின் மூலம் அடிப்படைக் கடமைகளானது இந்திய அரசமைப்பில் சேர்க்கப்பட்டது.

(A) 42–வது அரசியலமைப்புத் திருத்தம் 1976

(B) 43–வது அரசியலமைப்புத் திருத்தம் 1977

(C) 44–வது அரசியலமைப்புத் திருத்தம் 1978

(D) 45–வது அரசியலமைப்புத் திருத்தம் 1980

(E) விடை தெரியவில்லை

176. Which is/are the key feature/s of the Women's Reservation Bill passed by the Lok Sabha on 20th Sept. 2023?

(i) The Bill reserves 33% of all seats for women in Lok Sabha and State Legislative Assemblies.

(ii) It will not apply to the seats reserved for SC/ST in Lok Sabha and State Legislatures.

(iii) Reservation to be provided for 25 years.

(iv) To be effective after delimitation exercise.

(A) (i) and (ii) only

(B) (i) and (iv) only

(C) (ii) and (iii) only

(D) (i) and (iii) only

(E) Answer not known

செப்டம்பர் 20, 2023 அன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்ட மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவின் முக்கிய அம்சங்கள் எவை?

(i) இந்த மசோதா மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களில் உள்ள அனைத்து இடங்களிலும் பெண்களுக்கு 33% ஒதுக்குகிறது.

(ii) லோக் சபா மற்றும் மாநில சட்டமன்றங்களில் SC/ST க்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு இது பொருந்தாது.

(iii) 25 ஆண்டுகளுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படும்.

(iv) தொகுதி மறுவரையறைப் பயிற்சிக்குப் பிறகு நடைமுறைக்கு வரும்.

(A) (i) மற்றும் (ii) மட்டும்

(B) (i) மற்றும் (iv) மட்டும்

(C) (ii) மற்றும் (iii) மட்டும்

(D) (i) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

177. Which of the following statements are true about Micro, Small and Medium Enterprises (MSMEs) in Tamil Nadu?

(i) Tamil Nadu ranks third in the country in Udyam Registrations.

(ii) 30% of the state's entrepreneurs are women.

(iii) Coimbatore has the most number of MSMEs in the state.

(A) (i) only

(B) (ii) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (i) and (iii) only

(E) Answer not known

தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME கள்) பற்றி பின்வரும் கூற்றுகளில் எது சரியானவை?

(i) உத்யம் பதிவுகளில் தமிழ்நாடு இந்தியாவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

(ii) மாநிலத்தின் 30% தொழில்முனைவோர் பெண்கள்.

(iii) கோயம்புத்தூரில் தான் மாநிலத்திலேயே அதிக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உள்ளன.

(A) (i) மட்டும்

(B) (ii) மற்றும் (iii) மட்டுமே

(C) (i) மற்றும் (ii) மட்டுமே

(D) (i) மற்றும் (iii) மட்டுமே

(E) விடை தெரியவில்லை

178. Arranging the chronological order/event type. Arrange the major Pallava Kings.

| | | | |
|---|---|---|---|
| 1. | Simhavishnu | – | 555 to 590 CE |
| 2. | Mahendravarman I | – | 590 to 630 CE |
| 3. | Narasimhavarman I | – | 630 to 668 CE |
| 4. | Rajasimha | – | 695 to 728 CE |

(A) 1, 2, 3, 4

(B) 3, 1, 2, 4

(C) 4, 2, 3, 1

(D) 2, 4, 1, 3

(E) Answer not known

காலவரிசைப்படி பல்லவ மன்னர்களை வரிசைப்படுத்து :

| | | | |
|---|---|---|---|
| 1. | சிம்மவிஷ்ணு | – | 555 லிருந்து 590 CE |
| 2. | மகேந்திரவர்மன் I | – | 590 லிருந்து 630 CE |
| 3. | நரசிம்மவர்மன் I | – | 630 லிருந்து 668 CE |
| 4. | ராஜசிம்மா | – | 695 லிருந்து 728 CE |

(A) 1, 2, 3, 4

(B) 3, 1, 2, 4

(C) 4, 2, 3, 1

(D) 2, 4, 1, 3

(E) விடை தெரியவில்லை

179. Ravi ranks $9^{th}$ in a class of 45 students. There are 18 students below Raj Rankwise. How many students are there between Ravi and Raj rankwise?

(A) 27

(B) 17

(C) 18

(D) 19

(E) Answer not known

45 மாணவர்கள் உள்ள வகுப்பில் ரவி 9 வது தரம் பெற்றுள்ளார். இராஜ்க்கு கீழே 18 மாணவர்கள் தரம் பெற்றுள்ளனர். ரவி மற்றும் ராஜ்க்கு இடைப்பட்ட தரம் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை என்ன?

(A) 27

(B) 17

(C) 18

(D) 19

(E) விடை தெரியவில்லை

180. Consider the statements about the soil and choose the right answer :

(1) The soils of northern plains are largely deposited by Himalayan Rivers.

(2) The presence of Iron Oxide is more in a soil popularly known as black soil.

(3) The soil derived from deccan trap is fertile and has high moisture holding capacity.

(A) (1) is true/correct

(B) (1) and (3) are correct

(C) (2) and (3) are correct

(D) (1) and (2) are correct

(E) Answer not known

மண் பற்றிய கூற்றில் சரியானவற்றை தேர்ந்தெடு :

(1) வட இந்திய சமவெளியின் மண் பெரும்பாலும் இமயமலை ஆறுகளால் படியவைக்கப்படுகிறது.

(2) கருப்பு மண் என்று பிரபலமாக அறியப்படும் மண்ணில் இரும்பு ஆக்சைடு அதிகம் உள்ளது.

(3) தக்காணப் பீடபூமியிலிருந்து உருவாகும் மண் வளமான மற்றும் அதிக ஈரப்பதத்தை தாங்கும் திறனுடையது.

(A) (1) மட்டும் சரியானது

(B) (1) மற்றும் (3) சரியானது

(C) (2) மற்றும் (3) சரியானது

(D) (1) மற்றும் (2) சரியானது

(E) விடை தெரியவில்லை

181. Identify the correct order of the table of Precedence

(A) Ministers of State of the Union, Chief Ministers of States, Speaker of the Lok Sabha, Vice-President

(B) Vice-President, Speaker of the Lok Sabha, Chief Ministers of States, Ministers of State of the Union

(C) Vice-President, Ministers of State of the Union, Speaker of the Lok Sabha, Chief Ministers of States

(D) Vice-President, Speaker of the Lok Sabha, Ministers of State of the Union, Chief Ministers of States

(E) Answer not known

முன்னுரிமை அட்டவணை வரிசையின்படி சரியான வரிசை ஒழுங்கினைக் கண்டறிக

(A) மத்திய அரசாங்கத்தின் இணை அமைச்சர்கள், மாநில முதலமைச்சர்கள், மக்களவை சபாநாயகர், துணை ஜனாதிபதி

(B) துணை ஜனாதிபதி, மக்களவை சபாநாயகர், மாநில முதலமைச்சர்கள், மத்திய அரசாங்கத்தின் இணை அமைச்சர்கள்

(C) துணை ஜனாதிபதி, மத்திய அரசாங்கத்தின் இணை அமைச்சர்கள், மக்களவை சபாநாயகர், மாநில முதலமைச்சர்கள்

(D) துணை ஜனாதிபதி, மக்களவை சபாநாயகர், மத்திய அரசாங்கத்தின் இணை அமைச்சர்கள், மாநில முதலமைச்சர்கள்

(E) விடை தெரியவில்லை

182. The initative to eliminate open defecation in India and improve solid waste management through the 'Swachh Bharat mission', leads to

(A) Decline in poverty rates

(B) Improve employment opportunities

(C) Improve public health and foster a culture of cleanliness

(D) Inadequate infrastructure

(E) Answer not known

இந்தியாவில் திறந்தவெளி மலம் கழிப்பதை ஒழிப்பதற்கும், 'ஸ்வச் பாரத் மிஷன்' மூலம் திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படும் முயற்சிகள்

(A) வறுமை விகிதங்களைக் குறைத்தல்

(B) வேலைவாய்ப்புகளை மேம்படுத்துதல்

(C) பொது சுகாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் தூய்மைக் கலாச்சாரத்தை வளர்ப்பது

(D) போதுமான உள்கட்டமைப்பு இல்லாமை

(E) விடை தெரியவில்லை

183. Read the following assertion and reason and select the correct answer from the code given below.

Assertion [A] : In 1801 the British attacked Sivagangai with a powerful army.

Reason [R] : In 1801 the Marudhu brother Chinna Marudhu gave asylum to Oomaidurai.

(A) [A] is true but [R] is false

(B) [A] is false but [R] is true

(C) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

(D) Both [A] and [R] are true but [R] is not a correct explanation of [A]

(E) Answer not known

பின்வரும் கூற்று மற்றும் காரணத்தைப் படித்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

கூற்று [A] : 1801ம் ஆண்டில், ஆங்கிலேயர்கள் ஓர் சக்திவாய்ந்த படையுடன் சிவகங்கையைத் தாக்கினர்.

காரணம் [R] : 1801ம் ஆண்டில் மருது சகோதரர் சின்ன மருது ஊமைதுரைக்கு அடைக்கலம் கொடுத்தார்.

(A) கூற்று [A] சரி ஆனால் காரணம் [R] தவறு

(B) கூற்று [A] தவறு ஆனால் காரணம் [R] சரி

(C) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி மற்றும் காரணம் [R] என்பது கூற்று [A] இன் சரியான விளக்கம்

(D) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி ஆனால் காரணம் [R] என்பது கூற்று [A] இன் சரியான விளக்கம் அல்ல

(E) விடை தெரியவில்லை

184. A, B and C can separately do a work in 12, 15 and 20 days respectively. They started to work together but C left after 2 days. Then A and B will finish the remaining work in _________ days.

(A) 4
(B) 5
(C) 6
(D) 15
(E) Answer not known

A, B மற்றும் C ஆகியோர் தனித்தனியாக ஒரு வேலையை முறையே 12 நாட்கள், 15 நாட்கள் மற்றும் 20 நாட்களில் செய்கின்றனர். இப்போது மூன்று பேரும் அவ்வேலையை ஒன்றாக செய்யத் துவங்குகின்றனர். ஆனால் C இரண்டு நாட்களில் வேலையை விட்டுவிடுகிறார் எனில், A-ம், B-ம் மீதமுள்ள வேலையை _________ நாட்களில் முடிப்பர்.

(A) 4
(B) 5
(C) 6
(D) 15
(E) விடை தெரியவில்லை

185. A square park is surrounded by a path of uniform width 2 metre all around it. The area of the path is 288 sq. metres. Find the perimeter of the park

(A) 124 m
(B) 144 m
(C) 100 m
(D) 136 m
(E) Answer not known

ஒரு சதுர வடிவிலான பூங்காவானது, அதன் அனைத்து பக்கங்களிலும் 2 மீ அகலமுள்ள ஒரே அளவிலான பாதையால் சூழப்பட்டுள்ளது. அந்தப் பாதையின் பரப்பளவு 288 ச.மீ எனில் அந்தப் பூங்காவின் சுற்றளவினைக் காண்க.

(A) 124 மீ
(B) 144 மீ
(C) 100 மீ
(D) 136 மீ
(E) விடை தெரியவில்லை

186. Modern man originated in which period and epoch of Geological Time scale :

| | Period | – | Epoch |
|---|---|---|---|
| | Period | – | Epoch |
| (i) | Tertiary | – | Paleocene |
| (ii) | Tertiary | – | Pliocene |
| (iii) | Tertiary | – | Oligocene |
| (iv) | Tertiary | – | Miocene |

QUESTION NEED TO BE VERIFIED

(A) (i) is correct
(B) (ii) is correct
(C) (iii) is correct
(D) (iv) is correct
(E) Answer not known

புவியியல் கால அட்டவணையில் நவீன மனிதன் எந்த பருவம் மற்றும் சிறு காலத்தில் தோன்றினான் :

| | பருவம் | – | சிறுகாலம் |
|---|---|---|---|
| (i) | டெர்ஷியரி | – | பேலியோசீன் |
| (ii) | டெர்ஷியரி | – | பிளியோசீன் |
| (iii) | டெர்ஷியரி | – | ஆலிகோசீன் |
| (iv) | டெர்ஷியரி | – | மையோசீன் |

(A) (i) சரியானவை
(B) (ii) சரியானவை
(C) (iii) சரியானவை
(D) (iv) சரியானவை
(E) விடை தெரியவில்லை

187. Consider the following pairs :

| Famous Place | | Region |
|---|---|---|
| (1) Bodhgaya | – | Baghelkhand |
| (2) Khajuraho | – | Bundelkhand |
| (3) Shirdi | – | Vidarbha |
| (4) Nasik | – | Malwa |
| (5) Tirupathi | – | Rayalaseema |

Which of the pairs given above are correctly matched?

(A) (1), (2) and (4) only

(B) (2), (3), (4) and (5) only

(C) (2) and (5) only

(D) (1), (3), (4) and (5) only

(E) Answer not known

கீழ்க்கண்டவற்றைச் சரியாகப் பொருத்துக :

| புகழ்பெற்ற இடம் | | பகுதி |
|---|---|---|
| (1) புத்தகயா | – | பகல்கண்ட் |
| (2) கஜுராகோ | – | பண்டல்கண்ட் |
| (3) ஷீர்டி | – | விதர்பா |
| (4) நாசிக் | – | மால்வா |
| (5) திருப்பதி | – | இராயலசீமா |

கீழ்கண்டவற்றுள் எவை சரியாக பொருந்துகின்றன?

(A) (1), (2) மற்றும் (4) மட்டும் சரி

(B) (2), (3), (4) மற்றும் (5) மட்டும் சரி

(C) (2) மற்றும் (5) மட்டும் சரி

(D) (1), (3), (4) மற்றும் (5) மட்டும் சரி

(E) விடை தெரியவில்லை

188. Arrange the following states with respect to their Niti Aayog SDG India Index 2023-24 rankings

(1) Tamil Nadu

(2) Uttarakhand

(3) Kerala

(4) Goa

(A) (1), (3), (2), (4)

(B) (1), (2), (4), (3)

(C) (2), (3), (1), (4)

(D) (2), (1), (3), (4)

(E) Answer not known

நிதி ஆயோக்கின் SDG இந்தியக் குறியீடு 2023-24 தரவரிசைப்படி பின்வரும் மாநிலங்களை வரிசைப்படுத்துக.

(1) தமிழ்நாடு

(2) உத்திரகண்ட்

(3) கேரளா

(4) கோவா

(A) (1), (3), (2), (4)

(B) (1), (2), (4), (3)

(C) (2), (3), (1), (4)

(D) (2), (1), (3), (4)

(E) விடை தெரியவில்லை

189. The ceiling limit per individual for cashless treatment for the first 48 hours of the roadside accidents under "Nammai Kaakum-48" scheme is Rs.

(A) 1.00 lakh
(B) 2.00 lakh
(C) 2.50 lakh
(D) 3.00 lakh
(E) Answer not known

நம்மைக் காக்கும்-48 திட்டத்தின் கீழ், விபத்து நடைபெற்ற முதல் 48 மணி நேரத்திற்குள் பணமில்லா சிகிச்சைக்கான உச்சவரம்பு ஒரு நபருக்கு ரூ. ________ ஆகும்.

(A) 1.00 லட்சம்
(B) 2.00 லட்சம்
(C) 2.50 லட்சம்
(D) 3.00 லட்சம்
(E) விடை தெரியவில்லை

190. The Central Institute of Classical Tamil (CICT) is functioning in its own new dedicated premises from 2022 onwards in

(A) Chepauk
(B) Mysore
(C) Kilambakkam
(D) Perumbakkam
(E) Answer not known

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், 2022ஆம் வருடம் முதல் அதன் சொந்த புதிய பிரத்யேக வளாகத்தில் செயல்பட்டு வரும் இடம்

(A) சேப்பாக்கம்
(B) மைசூர்
(C) கிளாம்பாக்கம்
(D) பெரும்பாக்கம்
(E) விடை தெரியவில்லை

191. What according Valluvar is actually possessed by the people who are called as possessors?

(A) Motivated

(B) Heroic

(C) Wealthy

(D) Educated

(E) Answer not known

உடையவர்கள் என்போர் எதை உடையவர் என்று வள்ளுவர் கூறுகிறார்?

(A) ஊக்கம் உடையோர்

(B) வீரம் உடையோர்

(C) செல்வம் உடையோர்

(D) கல்வி உடையோர்

(E) விடை தெரியவில்லை

192. Find the next term.

64, 32, 48, 120, 420, ________.

(A) 1260

(B) 1890

(C) 1686

(D) 2318

(E) Answer not known

அடுத்த உறுப்பு காண்.

64, 32, 48, 120, 420, ________.

(A) 1260

(B) 1890

(C) 1686

(D) 2318

(E) விடை தெரியவில்லை

193. Directions : Based on the digit-alphabets-symbols series given below, answer the following.

@18HLI6K*&?UE

How many numbers are there in the series which are preceded by a vowel and succeeded by a consonant?

(A) Two

(B) Four

(C) Three

(D) One

(E) Answer not known

குறிப்பு : கீழே கொடுக்கப்பட்டுள்ள இலக்கங்கள்-எழுத்துக்கள்–குறியீடுகள் தொடரிலிருந்து கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிக்கவும்.

@18HLI6K*&?UE

இத்தொடரில் எத்தனை எண்கள் உயிரெழுத்தை தொடர்ந்தும், உயிர்மெய் எழுத்துக்கு முன்னும் அமைந்துள்ளது ?

(A) இரண்டு

(B) நான்கு

(C) மூன்று

(D) ஒன்று

(E) விடை தெரியவில்லை

194. Match the following List I with List II SDGs (Sustainable Development Goals) :

| | List I | | List II |
|---|---|---|---|
| (a) | SDG 6 | 1. | Life on Land |
| (b) | SDG 11 | 2. | Life Below Water |
| (c) | SDG 14 | 3. | Clean Water and Sanitation |
| (d) | SDG 15 | 4. | Sustainable Cities and Communities |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) Answer not known

கீழ்க்காணும் நிலையான வளர்ச்சி இலக்குகளைப் பட்டியல் I யை பட்டியல் II உடன் பொருத்துக :

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | நிலையான வளர்ச்சி இலக்கு – 6 | 1. | நிலத்தில் வாழும் உயிரிகள் |
| (b) | நிலையான வளர்ச்சி இலக்கு – 11 | 2. | தண்ணீருக்கு உள்ளே வாழும் உயிரிகள் |
| (c) | நிலையான வளர்ச்சி இலக்கு – 14 | 3. | சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம் |
| (d) | நிலையான வளர்ச்சி இலக்கு – 15 | 4. | நிலையான நகர்புறங்கள் மற்றும் சமூகங்கள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

195. Choose the correct answer by using Reason [R] and Assertion [A] :

Assertion [A] : The Constitution of India specifically mentions the power of Judicial review.

Reason [R] : The Judiciary has successfully expanded the scope of Judicial review over the years.

(A) [A] is true; but [R] is false

(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]

(C) [A] is false, [R] is true

(D) Both [A] and [R] are true; but [R] is not correct explanation of [A]

(E) Answer not known

கீழ்வரும் கூற்று [A] மற்றும் காரணம் [R] ஆகியவற்றை பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

கூற்று [A] : இந்திய அரசமைப்புச் சட்டம் மிகவும் குறிப்பாக நீதிப்புனராய்வு அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது.

காரணம் [R] : நீதித்துறையானது தனது நீதிப்புனராய்வு அதிகாரத்தை அடுத்தடுத்தாண்டுகளில் விரிவாக்கிக் கொண்டது.

(A) [A] ஆனது சரி, ஆனால் [R] ஆனது தவறு

(B) [A] மற்றும் [R] ஆனது சரி; மற்றும் [R] ஆனது [A] ன் சரியான விளக்கம்

(C) [A] ஆனது தவறு, [R] ஆனது சரி

(D) [A] மற்றும் [R] ஆனது சரியானதாகும்; ஆனால் [R] ஆனது [A] க்கு சரியான விளக்கமல்ல

(E) விடை தெரியவில்லை

196. Assertion [A] : Women's empowerment is a cornerstone of social justice. Initiatives such as working women hostels, creches and women-specific skilling programmes aim to enhance women's participation in the work force.

Reason [R] : Removing barriers to women's participation in the economy, the Government is fostering a more inclusive and dynamic work force.

(A) [A] is true; [R] is false

(B) [A] is false; [R] is true

(C) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]

(D) Both [A] and [R] are true, and [R] is not the correct explanation of [A]

(E) Answer not known

கூற்று [A] : பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்பது சமூக நீதியின் ஒரு மூலக்கல்லாகும். பணிபுரியும் பெண்கள் விடுதிகள், குழந்தைப் பராமரிப்பு மையங்கள் மற்றும் பெண்கள் தொடர்பான திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற முயற்சிகள் பணித் தொகுதியில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

காரணம் [R] : பொருளாதாரத்தில் பெண்கள் பங்கேற்பதற்கான தடைகளை நீக்கி, அரசாங்கம் மிகவும் உள்ளடக்கிய மற்றும் துடிப்பான தொழிலாளர்களை வளர்த்து வருகிறது.

(A) கூற்று [A] சரி; காரணம் [R] தவறு

(B) கூற்று [A] தவறு; காரணம் [R] சரி

(C) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி, மேலும் காரணம் [R] கூற்று [A] க்கான சரியான விளக்கமாகும்

(D) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி, மேலும் காரணம் [R] கூற்று [A] க்கான சரியான விளக்கமல்ல

(E) விடை தெரியவில்லை

197. Choose the right matches among type :

| | | | |
|---|---|---|---|
| (1) | Kaverippakkam Inscription | – | Varaguna |
| (2) | Thirumukkudal Inscription | – | Virarajendra |
| (3) | Tiruvalangadu Plates | – | Rajendra I |
| (4) | Uthiramerur Inscription | – | Parantaka I |

(A) (1) and (2) are correct

(B) (3) and (4) are correct

(C) (2), (3) and (4) are correct

(D) (1), (2) and (3) are correct

(E) Answer not known

சரியான பொருத்தங்களை தேர்ந்தெடுக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| (1) | காவேரிப்பாக்கம் கல்வெட்டு | – | வரகுணா |
| (2) | திருமுக்கூடல் கல்வெட்டு | – | வீரராஜேந்திரா |
| (3) | திருவாலங்காடு செப்பேடு | – | முதலாம் ராஜேந்திரா |
| (4) | உத்திரமேரூர் கல்வெட்டு | – | முதலாம் பராந்தகா |

(A) (1) மற்றும் (2) சரி

(B) (3) மற்றும் (4) சரி

(C) (2), (3) மற்றும் (4) சரி

(D) (1), (2) மற்றும் (3) சரி

(E) விடை தெரியவில்லை

198. Two numbers are in the ratio of 15 : 11. If their HCF is 13. Find the numbers.

(A) 585 and 429
(B) 195 and 143
(C) 390 and 286
(D) 117 and 182
(E) Answer not known

இரு எண்கள் 15 : 11 என்ற விகிதத்தில் அமைந்துள்ளன. அவற்றின் மீ.பொ.வ 13 எனில் அந்த எண்களைக் காண்க.

(A) 585 மற்றும் 429
(B) 195 மற்றும் 143
(C) 390 மற்றும் 286
(D) 117 மற்றும் 182
(E) விடை தெரியவில்லை

199. The least number of square tiles required to pave the ceiling of a room 15 m 17 cm long and 9 m 2 cm broad is

(A) 738
(B) 814
(C) 902
(D) 656
(E) Answer not known

15 மீ 17 செ.மீ நீளமும் 9 மீ 2 செ.மீ அகலமும் கொண்ட ஒரு அறையின் தளத்தை அமைக்கத் தேவையான சதுர ஓடுகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை என்ன?

(A) 738
(B) 814
(C) 902
(D) 656
(E) விடை தெரியவில்லை

200. Choose the right matches of the following places where Sangam period coins were found in Tamil Nadu.

(1) Dharmapuri – Thoppoor

(2) Salem – Kanniyan Kuttai

(3) Erode – Mukkombu

(4) Trichy – Vembavoor

(A) (1) and (2) are correct

(B) (2) and (3) are correct

(C) (3) and (4) are correct

(D) (2) and (4) are correct

(E) Answer not known

சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

தமிழகத்தில் சங்ககால காசுகள் கிடைத்த இடங்கள்.

(1) தர்மபுரி – தொப்பூர்

(2) சேலம் – கன்னியன் குட்டை

(3) ஈரோடு – முக்கொம்பு

(4) திருச்சி – வெம்பாவூர்

(A) (1) மற்றும் (2) சரி

(B) (2) மற்றும் (3) சரி

(C) (3) மற்றும் (4) சரி

(D) (2) மற்றும் (4) சரி

(E) விடை தெரியவில்லை